அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை – 2022 (2023)

# 33 கணக்கீடு

## புள்ளியிடும் திட்டம்

இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

க.பொ.த பத்திர (உயர் தர)ப் பரீட்சை – 2022 (2023)

# 33 - கணக்கீடு

## புள்ளி வழங்கும் திட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| வினாத்தாள் I | : | 4 x 50 | = | 200 |
| வினாத்தாள் II | : | | = | 200 |
| மொத்தம் | | | | 400 |

இறுதிப் புள்ளி = $400 \div 4$

= 100

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) .................................................... ✓ $\frac{4}{5}$

(ii) .................................................... ✓ $\frac{3}{5}$

(iii) .................................................... ✓ $\frac{3}{5}$

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடப்பட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன்பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப்பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

### கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

### புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

○○○

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

ගිණුම්කරණය I
கணக்கீடு I
Accounting I

**33 T I**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

அறிவுறுத்தல்கள் :
- ✻ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ✻ 1 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ✻ 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ✻ ஒவ்வொரு வினாவுக்கும் சமமான புள்ளிகள் உரித்தாகும்.
- ✻ உங்கள் சுட்டெண்ணை மேலே கொடுக்கப்பட்டுள்ள கூட்டினுள் தெளிவாக எழுதுக.
- ✻ செய்நிரலாக்கத்தகா (Non-Programmable) கணிப்பான்கள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும்.

சுட்டெண் : ..............................

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| | ஒப்பம் | குறியீட்டெண் |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

| வினாத்தாள் I இற்கானது | |
|---|---|
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

**1.** பின்வரும் கூற்றுக்களுள் எது நிறுவனமொன்றின் நிதிக் கணக்கீட்டின் பிரதான நோக்கத்தை மிகவும் சிறப்பாக விபரிக்கின்றது?
(1) சட்டத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்.
(2) ஒவ்வொரு காலப்பகுதிக்குமுரிய கொடுக்கல்வாங்கல்களைக் கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்தல்.
(3) கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதித் தகவல்களாக மாற்றுதல்.
(4) திட்டமிடல் மற்றும் கட்டுப்பாட்டுக்காக முகாமையாளர்களுக்குத் தகவல்களை வழங்குதல்.
(5) தீர்மானமெடுத்தலுக்காக அக்கறையுடைய வெளியகத் தரப்பினர்களுக்குத் தகவல்களை வழங்குதல்.
(......)

**2.** பின்வரும் கணக்கீட்டு எண்ணக்கருக்களுள் எது நிறுவனமொன்றின் வணிகச் செயற்பாடுகளின் காரணமாக ஏற்படும் வரி மாசடைதலை நிதிக்கூற்றுக்களில் இனங்காணாமைக்கு இட்டுச் செல்கின்றது?
(1) அட்டுறு (2) பண அளவீடு (3) பொருண்மை
(4) முன்னெச்சரிக்கை (5) இணைத்தல்
(......)

**3.** பின்வரும் கணக்கீட்டு எண்ணக்கருக்களுள் எது நிறுவனமொன்றின் வருட இறுதியில் ஐயக்கடன் ஒதுக்கீடொன்றை மேற்கொள்வதற்கான அடிப்படையை வழங்குகின்றது?
(1) அட்டுறு மற்றும் பொருண்மை
(2) தொழில் முழுமை மற்றும் தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவம்
(3) இணைத்தல் மற்றும் முன்னெச்சரிக்கை
(4) கால அளவீடு மற்றும் மாறாத் தன்மை
(5) முன்னெச்சரிக்கை மற்றும் பண அளவீடு
(......)

● **4 ஆம், 5 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**
மிதுலா PLC ஒரு மோட்டார் வாகன வியாபாரக் கம்பனி ஆகும். 01.01.2022 இல் இக்கம்பனி ரூ. 10 மில்லியன் பெறுமதியான மோட்டார் வாகனங்களைக் கடனுக்குக் கொள்வனவு செய்தது. இம்மோட்டார் வாகனங்களில் ரூ. 2 மில்லியன் கிரயமான மோட்டார் வாகனமொன்று அலுவலக வேலைகளில் பயன்படுத்துவதற்கென வைத்திருக்கப்பட்டது. 31.03.2022 இல் முடிவடையும் வருடத்திற்கான இவ்வாகனத்தின் பெறுமானத்தேய்வு ரூ. 100 000 ஆகும். எஞ்சியிருக்கும் வாகனங்கள் வியாபாரத்துக்காக வைத்திருக்கப்பட்டன. இவற்றுள் ரூ. 3 மில்லியன் கிரயமுள்ள மோட்டார் வாகனமொன்று 31.03.2022 இல் ரூ. 4 மில்லியனுக்குக் காசுக்கு விற்பனை செய்யப்பட்டது.

**4.** மோட்டார் வாகனங்களின் கொள்வனவு மற்றும் மோட்டார் வாகன விற்பனையைப் பதிவு செய்வதற்குப் பின்வரும் மூலப்பதிவேடுகளில் எவை பயன்படுத்தப்படுகின்றன?

| | கொள்வனவு | விற்பனை |
|---|---|---|
| (1) | பொது நாளேடு | காசுப் பெறுவனவு நாளேடு |
| (2) | காசுக் கொடுப்பனவு நாளேடு | பொது நாளேடு |
| (3) | கொள்வனவு நாளேடு | விற்பனை நாளேடு |
| (4) | காசுக் கொடுப்பனவு நாளேடு மற்றும் பொது நாளேடு | விற்பனை நாளேடு மற்றும் பொது நாளேடு |
| (5) | கொள்வனவு நாளேடு மற்றும் பொது நாளேடு | காசுப் பெறுவனவு நாளேடு |

(......)

5. பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாடுகளில் எது அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களினதும் 31.03.2022 இல் உள்ளவாறான **தேறிய விளைவைப்** பிரதிபலிக்கின்றது?

| | நடைமுறையல்லாச் சொத்துக்கள் (ரூ.' 000) | + | நடைமுறைச் சொத்துக்கள் (ரூ.' 000) | = | பொறுப்புக்கள் (ரூ.' 000) | + | உரிமையாண்மை (ரூ.' 000) |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | + 1 600 | | + 9 000 | | + 10 000 | | + 600 |
| (2) | + 1 900 | | + 9 000 | | + 10 000 | | + 900 |
| (3) | + 2 000 | | + 9 000 | | + 10 000 | | + 1 000 |
| (4) | + 6 650 | | + 4 000 | | + 10 000 | | + 650 |
| (5) | + 7 000 | | + 4 000 | | + 10 000 | | + 1 000 |

(......)

● **6 ஆம், 7 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

பெறுமதி சேர் வரிக்காகப் (VAT) பதிவுசெய்யப்பட்ட கம்பனியான அமல் Ltd ஆனது 15.03.2022 இல் 'சுனில் றேடேர்ஸ்' க்குக் கடனுக்கு ரூ. 672 000 பெருட்களை விற்பனை செய்தது. இவ்விலைப்பட்டியல் பெறுமதியானது 12% பெறுமதி சேர் வரியை (VAT) உள்ளடக்கியுள்ளது. குறைபாடுகள் காரணமாக ரூ. 84 000 பட்டியல் விலைப் பெறுமதியுள்ள பொருட்களை 'சுனில் றேடேர்ஸ்' திருப்பியனுப்பியது. 31.03.2022 இல் 'சுனில் றேடேர்ஸ்' அமல் Ltd க்குரிய முழுத் தொகையினைத் தீர்ப்பதற்குக் காசோலை ஒன்றை வழங்கியது.

6. மேலே குறிப்பிட்ட எல்லாக் கொடுக்கல்வாங்கல்களையும் அவை ஏற்பட்ட ஒழுங்குவரிசைப்படி அமல் **Ltd** இன் புத்தகங்களில் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட மூல ஆவணங்கள்:
(1) பட்டியல், வரவுத்தாள், பற்றுச்சீட்டு
(2) பட்டியல், செலவுத்தாள், பற்றுச்சீட்டு
(3) பட்டியல், வரவுத்தாள், வைப்புத்துண்டு
(4) பட்டியல், செலவுத்தாள், கொடுப்பனவு உறுதிச்சீட்டு
(5) நாட்குறிப்புக்கான உறுதிச்சீட்டு, செலவுத்தாள், பற்றுச்சீட்டு (......)

7. 15.03.2022 இல் விற்பனை செய்யப்பட்ட பொருட்களை அமல் **Ltd** இன் புத்தகங்களில் பதிவு செய்வதற்கான சரியான இரட்டைப் பதிவு:

| | கணக்குகள் | வரவு (ரூ.' 000) | செலவு (ரூ.' 000) |
|---|---|---|---|
| (1) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 600 | |
| | விற்பனைக் கணக்கு | | 600 |
| (2) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 672 | |
| | விற்பனைக் கணக்கு | | 672 |
| (3) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 600 | |
| | VAT கட்டுப்பாட்டுக் கணக்கு | 72 | |
| | விற்பனைக் கணக்கு | | 672 |
| (4) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 672 | |
| | விற்பனைக் கணக்கு | | 600 |
| | VAT கட்டுப்பாட்டுக் கணக்கு | | 72 |
| (5) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 588 | |
| | விற்பனைக் கணக்கு | | 525 |
| | VAT கட்டுப்பாட்டுக் கணக்கு | | 63 |

(......)

● **8 ஆம், 9 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

'ரமணன் றேடேர்ஸ்' இன் 31.03.2022 இலுள்ளவாறு பரீட்சை மீதியானது சமப்படவில்லை. வித்தியாசமானது தொங்கல் கணக்கொன்றுக்கு மாற்றப்பட்டது. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையானது பின்வரும் வழுக்களை வெளிப்படுத்தியது.

A - மின்சாரச் செலவுகளுக்குச் செலுத்திய ரூ. 100 000 ஆனது காசுக் கணக்கில் சரியாகப் பதிவுசெய்யப்பட்டிருந்தது. ஆனால் இது மின்சாரச் செலவுக் கணக்கில் பதியப்படவில்லை.

B - காசுப் பெறுவனவுகள் நாளேட்டின் அனுமதித்த கழிவு நிரலின் மொத்தம் ரூ. 30 000 ஆனது அறவிடமுடியாக் கடனாக இனங்காணப்பட்டிருந்தது.

C - கொள்வனவு நாளேட்டின் மொத்தம் ரூ. 800 000 ஆனது கொள்வனவுக் கணக்கில் சரியாகப் பதிவுசெய்யப்பட்டிருந்தது. ஆனால் இது கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூ. 80 000 ஆகச் செலவு வைக்கப்பட்டிருந்தது.

D - 2022 மார்ச் மாதத்தில் கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்ட மொத்தக் காசு ரூ. 150 000 ஆனது காசுக் கணக்கில் சரியாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. ஆனால், இது தவறுதலாக கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

8. மேற்படி வழுக்களுள் எது தொங்கல் கணக்கிலுள்ள மீதிக்கு வழிவகுத்துள்ளது?
(1) A, C ஆகியன மாத்திரம்
(2) C, D ஆகியன மாத்திரம்
(3) A, C, D ஆகியன மாத்திரம்
(4) B, C, D ஆகியன மாத்திரம்
(5) A, B, C, D ஆகிய எல்லாம் (......)

9. மேற்படி வழுக்கள் திருத்தப்பட்ட பின்னர் 31.03.2022 இல் முடிவடையும் வருடத்துக்கான தேறிய இலாபத்தில் குறைவு, மற்றும் இத்தகைய வழுக்கள் திருத்தப்பட்ட முன்னருள்ள தொங்கல் கணக்கின் மீதி:

| | தேறிய இலாபத்தில் குறைவு (ரூ.' 000) | தொங்கல் கணக்கின் செலவு மீதி (ரூ.' 000) |
|---|---|---|
| (1) | 100 | 200 |
| (2) | 100 | 920 |
| (3) | 100 | 1 070 |
| (4) | 820 | 920 |
| (5) | 820 | 1 070 |

(......)

10. தனியுடைமையான "டிலானி ரேடேர்ஸ்" 31.03.2022 இல் முடிவடையும் வருடத்தில் ரூ. 58 000 பெறுமதியான பொருட்களை அன்பளிப்புச் செய்தது. எனினும், இந்த அன்பளிப்புத் தொடர்பில் கணக்குப் புத்தகங்களில் எந்தவித சீராக்கங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 31.03.2022 இல் முடிவடையும் வருடத்துக்கான நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யும் பொழுது, இறுதியிருப்பானது பௌதீக இருப்பின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டுள்ளது.
இப்பொருள் நன்கொடையானது கணக்குப் புத்தகங்களில் சரியாகச் சீராக்கப்படுமாயின், வணிகத்தின் மொத்த இலாபம் மற்றும் தேறிய இலாபம் என்பவற்றின் மீதான தாக்கம்.

| | மொத்த இலாபம் | தேறிய இலாபம் |
|---|---|---|
| (1) | ரூ. 58 000 ஆல் அதிகரிப்பு | தாக்கமில்லை |
| (2) | ரூ. 58 000 ஆல் அதிகரிப்பு | ரூ. 58 000 ஆல் குறைவு |
| (3) | தாக்கமில்லை | ரூ. 58 000 ஆல் அதிகரிப்பு |
| (4) | ரூ. 58 000 ஆல் குறைவு | தாக்கமில்லை |
| (5) | ரூ. 58 000 ஆல் குறைவு | ரூ. 58 000 ஆல் குறைவு |

(......)

11. பின்வரும் தகவல்கள் அனுசா ஆடை உற்பத்திக் கம்பனியின் கணக்குப் பதிவேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

| | ரூ.'000 |
|---|---|
| 01.04.2021 இல் மூலப்பொருள் இருப்பு | 2 000 |
| மூலப்பொருள் கொள்வனவுகள் | 29 000 |
| நுகரப்பட்ட மூலப்பொருள் கிரயம் | 26 000 |
| உற்பத்தித் தொழிலாளர் கூலிகள் | 42 000 |
| வணிகத்தின் கட்டட வாடகைச் செலவுகள் | 20 000 |
| இயந்திரப் பெறுமானத் தேய்வு | 6 000 |

கட்டடமானது தொழிற்சாலை மற்றும் நிர்வாக அலுவலகம் ஆகிய இரண்டுக்கும் பயன்படுத்தப்படுகின்றது. கட்டடத்தின் மொத்தத் தளப்பரப்பின் 80% ஆனது தொழிற்சாலைக்குப் பயன்படுத்தப்படுகின்றது.
31.03.2022 இல் உள்ளவாறான மூலப்பொருள் இருப்பு மற்றும் 31.03.2022 இல் முடிவடையும் வருடத்துக்கான மொத்த உற்பத்திக் கிரயம் யாது?

| | மூலப்பொருள் இருப்பு (ரூ.' 000) | மொத்த உற்பத்திக் கிரயம் (ரூ.' 000) |
|---|---|---|
| (1) | 1 000 | 93 000 |
| (2) | 3 000 | 90 000 |
| (3) | 3 000 | 93 000 |
| (4) | 5 000 | 90 000 |
| (5) | 5 000 | 93 000 |

(......)

- **12 ஆம், 13 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

ஒரு தனி வியாபாரியான 'மதன் ரேடேர்ஸ்' கணக்குப் பதிவேடுகளை முறையாகப் பேணவில்லை. 31.03.2022 மற்றும் 01.03.2022 இல் உள்ளவாறு நிறுவனத்தின் சில சொத்துக்களும், பொறுப்புக்களும் கீழே தரப்பட்டுள்ளன.

| | 31.03.2022 இல் (ரூ.) | 01.03.2022 இல் (ரூ.) |
|---|---|---|
| கிரயத்தில் இருப்பு | ? | 83 000 |
| வியாபாரக் கடன்பட்டோர் | 75 000 | 60 000 |
| வியாபாரக் கடன் கொடுத்தோர் | 15 000 | 5 000 |

31.03.2022 இல் முடிவடையும் மாதத்தில் நிறுவனம் வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்து ரூ. 50 000 சேகரித்ததுடன் வியாபாரக் கடன் கொடுத்தோருக்கு ரூ. 25 000 செலுத்தியிருந்தது.

இந்நிறுவனமானது விற்பனை விலையின் மீது 25% இலாபம் வைத்துப் பொருட்களை விற்பனை செய்கிறது. அனைத்துக் கொள்வனவுகளும், விற்பனைகளும் கடனடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

**12.** 31.03.2022 இல் முடிவடையும் மாதத்துக்கான கொள்வனவுகளும் விற்பனைகளும்:

| | கொள்வனவுகள் (ரூ.) | விற்பனைகள் (ரூ.) |
|---|---|---|
| (1) | 15 000 | 35 000 |
| (2) | 15 000 | 65 000 |
| (3) | 25 000 | 50 000 |
| (4) | 35 000 | 35 000 |
| (5) | 35 000 | 65 000 |

(......)

**13.** 31.03.2022 இல் உள்ளவாறான இருப்பின் கிரயம் யாது?

(1) ரூ. 48 750 (2) ரூ. 66 000 (3) ரூ. 69 250 (4) ரூ. 70 000 (5) ரூ. 71 750 (......)

**14.** பல்கலைக்கழக மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்களை வழங்குவதற்கென 01.01.2020 இல் "புலமை" நலன்புரிச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. 31.12.2021 இல் முடிவடையும் வருடத்துக்கான, இச்சங்கத்தின் கொள்ளல் கொடுத்தல் கணக்கின் விபரங்கள் பின்வருமாறு இருந்தன. (எனினும், இது 2021 ஆம் வருடத்துக்கான புலமைப்பரிசில் கொடுப்பனவுகளை உள்ளடக்கி இருக்கவில்லை)

| | ரூ.'000 |
|---|---|
| 01.01.2021 இல் மீதி | 1 500 |
| வருடத்தில் பெற்ற அன்பளிப்புக்கள் | 2 000 |
| வருடத்துக்காகப் பெற்ற வட்டி | 180 |
| 2020 இல் நிலுவையாக இருந்த 10 மாணவர்களின் புலமைப்பரிசில்களுக்கான கொடுப்பனவு | 20 |

அன்பளிப்புகளானவை அவை பெறப்படும் வருடத்தில் வருமானமாக இனங்காணப்படுகின்றன. ஒவ்வொரு மாணவனுக்கும் வருடாந்தப் புலமைப்பரிசிலாக ரூ. 24 000 கொடுக்கப்படுகின்றது. இது மாதமொன்றுக்கு ரூ. 2 000 ஆகச் செலுத்தப்படுகின்றது. 2021 ஆம் வருடத்தில் புலமைப்பரிசில்களுக்காகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 90 ஆக இருந்தது. இவர்களுள் 75 மாணவர்களுக்கு முழு வருடத்துக்குமான புலமைப்பரிசில்கள் செலுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சியுள்ள மாணவர்களுக்கு 10 மாதங்களுக்கு மட்டுமே செலுத்தப்படிருந்தது. மிகுதித் தொகையானது 2022 இல் செலுத்தப்பட்டது.

31.12.2021 இல் முடிவடையும் வருடத்துக்கான சங்கத்தின் மிகை / (பற்றாக்குறை) மற்றும் 31.12.2021 இல் உள்ளவாறான கொள்ளல் கொடுத்தல் கணக்கின் மீதி :

| | மிகை / (குறை) (ரூ.' 000) | கொள்ளல் கொடுக்கல் கணக்கின் மீதி (ரூ.' 000) |
|---|---|---|
| (1) | (160) | 1560 |
| (2) | (160) | 1860 |
| (3) | 20 | 1560 |
| (4) | 20 | 1860 |
| (5) | 80 | 1560 |

(......)

**15.** பங்குடமையொன்றின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் பின்வரும் கூற்றுக்களுள் எவை **சரியானவை?**

A - பங்குடமையொன்றின் இலாபமானது பங்காளர்களின் மூலதன வட்டி, சம்பளங்கள், மற்றும் இலாபப் பங்கு ஆகப் பகிரப்பட முடியும்.

B - காசுப்பாய்ச்சல் கூற்றானது பங்குடமைக்கெனத் தயாரிக்கப்பட முடியாது.

C - பங்குடமையின் இலாபத்தைப் பகிர்ந்தளிக்கும்போது, பங்காளர்களின் பொருள் பற்றுக்கள் சீராக்கப்படுதல் வேண்டும்.

D - பங்காளர்களால் வணிகத்துக்குக் கொடுக்கப்பட்ட கடன்கள் மீதான வட்டியானது பங்குடமையின் செலவொன்றாக இனங்காணப்படுகின்றது.

(1) A, B ஆகியன மாத்திரம் (2) A, D ஆகியன மாத்திரம்
(3) B, C ஆகியன மாத்திரம் (4) A, B, D ஆகியன மாத்திரம்
(5) A, C, D ஆகியன மாத்திரம் (......)

**16.** பங்குடமையொன்றின் பங்காளர்களுக்கு உரித்துடைய நன்மைகள் தொடர்பில் பின்வரும் கூற்றுக்களுள் எவை **சரியானவை?**

A - பங்காளர் ஒருவர் இளைப்பாறும் பொழுது, அவர் பங்குடமையின் பதிவு செய்யப்படாத சொத்துக்களிலிருந்தான நன்மையை இலாபப் பங்கு விகிதாசாரத்தில் பெற்றுக்கொள்வார்.

B - பங்குடமை உடன்பாட்டில் குறிப்பிடப்பட்டிருந்தால் மட்டும் பங்காளர் ஒருவரால் வழங்கப்பட்ட கடன் ஒன்றுக்கு வட்டி வழங்கப்பட முடியும்.

C - பங்குடமை உடன்பாட்டில் குறிப்பிடப்பட்டிராத பொழுது பங்குடமைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவுக்கமையப் பங்காளர்கள் சம்பளத்துக்கு உரித்துடையவரல்லர்.

D - பங்குடமை உடன்பாட்டில் குறிப்பிடப்பட்டிருப்பின், பங்காளர்கள் மூலதன வட்டிக்கு உரித்துடையவராவர்.

(1) A, B ஆகியன மாத்திரம் (2) C, D ஆகியன மாத்திரம்
(3) A, B, C ஆகியன மாத்திரம் (4) A, C, D ஆகியன மாத்திரம்
(5) A, B, C, D ஆகிய எல்லாம் (......)

17. 'LKAS 1- நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்' இன் பிரகாரம் பின்வரும் கூற்றுக்களில் எது / எவை சரியானது / சரியானவை?

A - நிறுவனமொன்று அதன் அனைத்து நிதிக்கூற்றுக்களையும் அட்டுறு அடிப்படையில் தயாரித்தல் வேண்டும்.

B - நிறுவனமொன்று நிதிக்கூற்றுக்களைத் தயார் செய்யும் பொழுது, வேறொரு நியமத்தால் அனுமதிக்கப்பட்டிருந்தாலன்றிச் சொத்துக்களையும், பொறுப்புக்களையும் எதிரீடு செய்யக் கூடாது.

C - நிறுவனமொன்று நிதிக்கூற்றுக்களின் தொகுதியிலுள்ள எல்லா நிதிக்கூற்றுக்களையும் சம அளவு முக்கியத்துவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) A, C ஆகியன மாத்திரம் (5) B, C ஆகியன மாத்திரம் (......)

18. ஆடை ஏற்றுமதிக் கம்பனியொன்றில் 2022 மார்ச் மாதத்தில் ஏற்பட்ட மேலாடைகளுக்கான கட்டளை ஒன்றுக்கான உற்பத்திக் கிரயத்துடன் தொடர்புடைய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | ரூ. '000 |
|---|---|
| மூலப்பொருள் கொள்வனவுகள் | 1 680 |
| மூலப்பொருள் உட்காவுகை | 600 |
| களஞ்சியத்தில் ஏற்பட்ட தீ காரணமாக அழிவடைந்த மூலப்பொருட் கிரயம் | 380 |
| நேர் ஊழியம் | 1 200 |
| மேலாடைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உற்பத்தி மேந்தலைகள் | 900 |

2022 மார்ச் மாதத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மேலாடைகள் முழுவதும் 31.03.2022 இல் உள்ளவாறான இருப்பாகக் காணப்பட்டது. இம் மேலாடைகளுக்கு ஏற்பட்ட களஞ்சியப்படுத்தல் கிரயம் ரூபா 250 000 ஆக இருந்தது. 01.03.2022 இலும் 31.03.2022 இலும் மூலப்பொருள் இருப்புக்கள் மற்றும் குறைவேலை இருப்புக்கள் எதுவும் இல்லை எனக் கருதுக.

'LKAS 2 - இருப்புக்கள்' இன்படி 31.03.2022 இல் உள்ளவாறான மேலாடைகள் இருப்பின் கிரயம்:

(1) ரூ. 3 400 000 (2) ரூ. 4 000 000 (3) ரூ. 4 250 000
(4) ரூ. 4 380 000 (5) ரூ. 4 630 000 (......)

19. 'LKAS 7 - காசுப்பாய்ச்சல் கூற்று' இன்படி பின்வரும் விடயங்களுள் எது/எவை உற்பத்தி நிறுவனமொன்றின் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்களாக வகைப்படுத்தப்படும்?

A - ஏனைய கம்பனிகளின் சாதாரண பங்குகளைக் கொள்வனவு செய்வதற்குச் செலுத்திய காசு.

B - ஒரு வருட முதிர்வுக் காலத்தையுடைய திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்வதற்குச் செலுத்திய காசு.

C - சொத்துப் பாவனை உரிமை ஒன்றுடன் தொடர்புடைய குத்தகைப் பொறுப்பைத் தீர்ப்பதற்குச் செலுத்திய காசு.

(1) A மாத்திரம் (2) B மாத்திரம்
(3) A, B ஆகியன மாத்திரம் (4) A, C ஆகியன மாத்திரம்
(5) A, B, C ஆகிய எல்லாம் (......)

20. 'LKAS 8 - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகள் மீதான மாற்றங்கள் மற்றும் வழுக்கள்' இன்படி பின்வரும் கூற்றுக்களுள் எது / எவை சரியானது / சரியானவை?

A - இயந்திரத்தின் பெறுமானத்தேய்வு முறையை நேர்கோட்டு முறையிலிருந்து குறைந்து செல்லும் மீதி முறைக்கு மாற்றுதலானது கணக்கீட்டு மதிப்பீடொன்றின் மீதான மாற்றமொன்றாகக் கருதப்படும்.

B - இருப்பு மதிப்பீட்டில் பயன்படுத்தப்படும் கிரயச் சூத்திரமான முதல் - உள் முதல் - வெளி (FIFO) முறையிலிருந்து நிறையளிக்கப்பட்ட சராசரிக் கிரய (WAC) முறைக்கு மாற்றுதலானது கணக்கீட்டுக் கொள்கையின் மீதான மாற்றமொன்றாகக் கருதப்படும்.

C - திருத்தம் செய்துகொள்வதற்கான நடைமுறைச் சாத்தியமற்றநிலை இருந்தாலன்றி, முந்திய கால முக்கிய வழுக்கள் நிதிக் கூற்றுக்களில் பின்நோக்கிய வகையில் திருத்தப்படும்.

(1) B மாத்திரம் (2) C மாத்திரம்
(3) A, B ஆகியன மாத்திரம் (4) B, C ஆகியன மாத்திரம்
(5) A, B, C ஆகிய எல்லாம் (......)

21. உதயன் PLC ஐந்து வருட காலப்பகுதிக்கு மோட்டார் வாகனமொன்றின் சொத்துப் பாவனை உரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக 31.03.2022 இல் குத்தகை உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக்கொண்டது. இத்திகதியில் ஆரம்பவைப்பாக ரூ. 3 000 000 செலுத்தப்பட்டிருந்தது. குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம், குத்தகைக் காலப்பகுதியில் ஒவ்வொன்றும் ரூ.1 055 190 ஆன ஐந்து வருடாந்தத் தவணைக் கட்டணங்கள் செலுத்தப்படுதல் வேண்டும். முதலாவது தவணைக்கட்டணம் 31.03.2023 இல் செலுத்தப்பட வேண்டியுள்ளது. இக்குத்தகை உடன்படிக்கையுடன் தொடர்புடைய மொத்த வட்டி ரூ. 1 275 950 ஆகும். இக்குத்தகையின் உட்கிடையான வட்டிவீதம் வருடமொன்றுக்கு 10% ஆகும்.

'SLFRS 16 - குத்தகைகள்' இன்படி 31.03.2022 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்பொன்றாகச் சமர்ப்பிக்கப்படும் குத்தகைப் பொறுப்பு:

(1) ரூ. 355 190 (2) ரூ. 655 190 (3) ரூ. 827 985
(4) ரூ. 1 055 190 (5) ரூ. 2 944 810 (......)

**22.** சாரங்கன் PLC இன் 31.03.2022 இல் முடிவடைந்த வருடத்துக்கு இனங்காணப்பட்ட மொத்த வருமானம் மற்றும் மொத்தச் செலவுகள் முறையே ரூ. 5 000 000, ரூ 3 500 000 ஆகும். இனங்காணப்பட்ட மொத்த வருமானம் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது:

- காணியின் முதல் தடவை மீள் மதிப்பீட்டின்போது ஏற்பட்ட மிகை ரூ. 800 000
- இயந்திரமொன்றின் விற்பனை மீதான ஆதாயம் ரூ. 200 000

இனங்காணப்பட்ட மொத்தச்செலவுகளானது மோட்டார் வாகனங்களை முதல்தடவை மீள்மதிப்பீடு செய்தபோது ஏற்பட்ட மீள்மதிப்பீட்டுப் பற்றாக்குறையான ரூ. 300 000 ஐயும் உள்ளடக்கியுள்ளது.

31.03.2022 இல் முடிவடையும் வருடத்துக்கான இலாபம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானம்:

| | இலாபம் (ரூ.' 000) | ஏனைய முற்றுமடங்கிய வருமானம் (ரூ.'000) |
|---|---|---|
| (1) | 700 | 800 |
| (2) | 700 | 1 500 |
| (3) | 800 | 700 |
| (4) | 1 000 | 500 |
| (5) | 1 000 | 800 |

(......)

**23.** பின்வரும் தகவல்கள் 31.03.2022 இல் முடிவடையும் வருடத்துக்கான சிவா PLC உடன் தொடர்புடையவையாகும்.

| | (ரூ.) |
|---|---|
| நடைமுறை வருடகாலத்தில் செலுத்திய மொத்த வருமான வரி பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது: | |
| • நடைமுறை வருடத்தின் முதல் மூன்று காலாண்டுக்கான சுயமதிப்பீட்டின் அடிப்படையில் செலுத்திய வருமான வரி | 2 750 000 |
| • கடந்த வருடத்துக்குச் செலுத்தவேண்டியுள்ள வருமான வரி மீதிக்கான கொடுப்பனவு | 900 000 |
| நடைமுறை வருடத்தின் இறுதிக் காலாண்டுக்கான வருமான வரிப் பொறுப்பு | 1 200 000 |
| 31.03.2021 இல் உள்ளவாறான வருமான வரிக்கான ஏற்பாடு | 800 000 |

31.03.2022 இல் முடிவடைந்த வருடத்துக்கு இனங்காணப்பட்ட வருமான வரிச் செலவுகள்:

(1) ரூ. 2 750 000 (2) ரூ. 3 650 000 (3) ரூ. 3 850 000
(4) ரூ. 3 950 000 (5) ரூ. 4 050 000 (......)

- **24** ஆம், **25** ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.

பின்வரும் தகவல்கள் சிவானி PLC உடன் தொடர்பானவை.

| 31.03.2022 இல் உள்ளபடியான மூலதனக் கட்டமைப்பு: | **ரூ.'000** |
|---|---|
| - உரிமையாண்மை | 200 000 |
| - 10% வங்கிக் கடன் | 150 000 |
| 31.03.2022 இல் முடிவடைந்த வருடத்துக்கானது: | |
| - விற்பனைகள் | 200 000 |
| - வரிக்கு முன் இலாபம் | 15 000 |
| - வருடத்துக்கான வரி | 3 000 |
| - சராசரி இருப்பு | 20 000 |

கம்பனி விற்பனை விலையின் மீது 20% இலாபம் வைத்துப் பொருட்களை விற்பனை செய்கிறது. 01.04.2021 இல் 10% வங்கிக்கடன் பெறப்பட்டது. வருட காலத்தில் அதன் மீதி மாற்றமின்றி இருந்தது.

**24.** வட்டிக்காப்பு விகிதம் மற்றும் கடன் - உரிமையாண்மை விகிதம்:

| | வட்டிக்காப்பு விகிதம் (தடவைகள்) | கடன் - உரிமையாண்மை விகிதம் |
|---|---|---|
| (1) | 0.8 | 0.75 |
| (2) | 0.8 | 1.33 |
| (3) | 1.0 | 0.75 |
| (4) | 2.0 | 0.75 |
| (5) | 2.0 | 1.33 |

(......)

**25.** உரிமையாண்மை மீதான திரும்பல் விகிதம் மற்றும், இருப்புப் புரள்வு விகிதம்:

| | உரிமையாண்மை மீதான திரும்பல் விகிதம் (%) | இருப்புப் புரள்வு விகிதம் (தடவைகள்) |
|---|---|---|
| (1) | 4.50 | 7.5 |
| (2) | 4.50 | 8.0 |
| (3) | 6.00 | 8.0 |
| (4) | 6.00 | 10.0 |
| (5) | 17.50 | 12.0 |

(......)

**26.** கம்பனியொன்று அடுத்துவரும் காலத்தில் 1 000 அலகுகளை உற்பத்தி செய்வதற்குத் திட்டமிடுகிறது. இது தொடர்பில் பின்வரும் மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளன.

| | ரூ. |
|---|---|
| மொத்த மூலப்பொருட் கிரயம் | 200 000 |
| மொத்த நேர் ஊழியக் கிரயம் | 140 000 |
| மொத்த மாறும் உற்பத்தி மேந்தலைகள் | 60 000 |
| மொத்த மாறும் உற்பத்தியல்லா மேந்தலைகள் | 300 000 |
| மொத்த நிலையான உற்பத்தி மேந்தலைகள் | 200 000 |
| மொத்த நிலையான உற்பத்தியல்லா மேந்தலைகள் | 600 000 |

**மேலதிக தகவல்கள்:**

நிலையான உற்பத்தி மேந்தலைகளானது உற்பத்தி அலகுகளின் அடிப்படையில் உறிஞ்சப்படுகின்றது. அலகொன்றிற்கான உற்பத்திக்கிரயம் யாது?

(1) ரூ. 600 (2) ரூ. 900 (3) ரூ. 1 000 (4) ரூ. 1 200 (5) ரூ. 1 500 (......)

**27.** உற்பத்தி வணிகமொன்றில் பயன்படுத்தப்படும் ஒருவகையான மூலப்பொருளின் வருடாந்த நுகர்வு 3 000 அலகுகளாகும். இம்மூலப்பொருளின் கட்டளையொன்றிற்கான கிரயம் ரூ. 300 ஆகவும் இதன் அலகொன்றிற்கான வருடாந்த இருப்பு வைத்தற் கிரயம் ரூ. 5 ஆகவும் இருந்தது.

இம்மூலப்பொருளின் சிக்கனக் கட்டளைத் தொகை ( EOQ):

(1) 100 அலகுகள் (2) 173 அலகுகள் (3) 424 அலகுகள் (4) 600 அலகுகள் (5) 1 342 அலகுகள் (......)

**28.** பின்வரும் தகவல்கள் கம்பனியொன்றின் 2022 ஏப்ரல் மாதத்திற்கான சம்பளப்பட்டியலிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

| | ரூ. |
|---|---|
| அடிப்படைச் சம்பளம் | 880 000 |
| மாதாந்த வாழ்க்கைச் செலவுப் படி | 20 000 |
| கடன் தவணைக் கட்டணங்களுக்கான கழிப்பனவு | 150 000 |

**மேலதிக தகவல்கள்:**

- ஊழியர் சேமலாப நிதி (EPF) இற்கு ஊழியர் மற்றும் தொழில் கொள்வோரின் பங்களிப்புக்கள் முறையே 8% மற்றும் 12% ஆகும்.
- ஊழியர் நம்பிக்கை நிதி (ETF) இற்கு பங்களிப்பு 3% ஆகும்.
- ஊழியர் சேமலாப நிதி (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கான (ETF) பங்களிப்புக்கள் அடிப்படைச் சம்பளம் மற்றும் ஊழியர்களுக்குச் செலுத்திய படிகளின் அடிப்படையில் கணிக்கப்படுகின்றன.

கம்பனியின் 2022 ஏப்ரல் மாதத்திற்கான மொத்தச் சம்பளச் செலவுகள் (ஊழியர் சேமலாப நிதி (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிச் (ETF) செலவுகள் உட்பட):

(1) ரூ. 813 000 (2) ரூ. 913 000 (3) ரூ. 1 035 000
(4) ரூ. 1 135 000 (5) ரூ. 1 150 000 (......)

**29.** பின்வரும் கூற்றுக்களுள் எது கிரயம் - தொகை - இலாபப் பகுப்பாய்வு தொடர்பில் பிழையானது?

(1) சமப்பாட்டுப் புள்ளியில் மொத்தப் பங்களிப்பானது, மொத்த நிலையான கிரயத்துக்குச் சமமாகும்.
(2) சமப்பாட்டுப் புள்ளிக்கு மேலுள்ள மொத்த இலாபமானது, மொத்தப் பங்களிப்பிலிருந்து மொத்த நிலையான கிரயத்தைக் கழித்து வரும் தொகைக்குச் சமனானதாகும்.
(3) விற்பனைப் பெறுமதியில் சமப்பாட்டுப் புள்ளியானது, மொத்த நிலையான கிரயத்தை பங்களிப்பு - விற்பனை விகிதத்தினால் பிரித்துக் கணிக்கப்படும்.
(4) பெறுமதியில் பாதுகாப்பு எல்லையானது இலாபத்தை பங்களிப்பு - விற்பனை விகிதத்தினால் பிரித்துக் கணிக்க முடியும்.
(5) சமப்பாட்டுப் புள்ளியில் விற்பனை வருமானமானது மொத்த நிலையான கிரயத்துக்குச் சமமாகும். (......)

**30.** மூலதன முதலீட்டுச் செயற்றிட்ட மதிப்பீடு தொடர்பில் பின்வரும் கூற்றுக்களுள் எது / எவை சரியானது / சரியானவை?

A - கணக்கீட்டு வருவாய் வீதமானது செயற்றிட்டமொன்றின் சராசரிக் காசுப்பாய்ச்சலை அதன் சராசரி முதலீட்டால் பிரிப்பதன் மூலம் கணிப்பிடப்படும்.

B - திரும்பப்பெறும் கால அடிப்படையில் செயற்றிட்டம் ஒன்றை மதிப்பீடு செய்கையில், திரும்பப்பெறும் காலத்துக்குப் பின் உருவாக்கப்படும் காசுப்பாய்ச்சல்கள் கருத்திற்கொள்ளப்படுவதில்லை.

C - செயற்றிட்டமொன்றின் நேர்க்கணியத் தேறிய நிகழ்காலப் பெறுமதியானது, அச்செயற்றிட்டமானது எதிர்பார்க்கப்படும் திரும்பல் வீதத்திலும் பார்க்கக் கூடுதலான திரும்பலை உருவாக்குகிறது என்பதைக் குறிக்கும்.

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) A, B ஆகியன மாத்திரம் (5) B, C ஆகியன மாத்திரம் (......)

● **31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

**31.** நிறுவனமொன்றின் முகாமைக் கணக்கீட்டுத் தகவல்கள் தொடர்பில் பின்வரும் கூற்றுக்கள் சரியா (T) அல்லது பிழையா (F) எனக் குறிப்பிடுக.

| கூற்று | சரி / பிழை |
|---|---|
| A - தகவல்களை வழங்குவதற்கு நிறுவனத்தின் உள்ளக வழிகாட்டல்களைப் பின்பற்றுகிறது | ................ |
| B - நிறுவனத்தின் பணரீதியான மற்றும் பணரீதியற்ற தகவல்கள் இரண்டினையும் வழங்குகிறது | ................ |
| C - நிறுவனத்தின் முகாமைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்குத் தகவல்களை வழங்குகிறது | ................ |
| D - நிறுவனத்தின் எதிர்காலத் தகவல்களை மட்டும் வழங்குகிறது | ................ |

**32.** 2022 மார்ச் மாதத்தில் சில்லறைக் காசுச் செலவுகள் ரூ. 16 000 நிறுவனமொன்றினால் செலுத்தப்பட்டிருந்ததுடன் 31.03.2022 இலுள்ளவாறு சில்லறைக்காசாளரிடம் ரூ. 4 000 மீதியாக இருந்தது.

**பின்வருவனவற்றைக் குறிப்பிடுக :**

(அ) நிறுவனத்தின் சில்லறைக்காசு முற்பணம் : ரூ. ..................................

(ஆ) சில்லறைக்காசு முற்பண மீள்நிரப்பலைப் பதிவதற்கான நாட்குறிப்புப் பதிவு (விளம்பல் தேவையில்லை)

| விபரம் | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
|---|---|---|
| .................................................. | .................. | |
| .................................................. | | .................. |

**33.** கனிலி வியாபாரத்தில் ஈடுபடும் தனியுடைமை ஒன்றின் கணக்கீட்டுச் சமன்பாட்டில் காணப்படும் உரிமையாண்மை மீதியின் மீது பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் ஏற்படுத்தும் தாக்கத்தினைப் பெறுமதியுடன் குறிப்பிடுக.

| கொடுக்கல்வாங்கல் | உரிமையாண்மை மீதியின் மீதான தாக்கம்: அதிகரிக்கும் (I) / குறையும் (D) / மாற்றமில்லை (NC) | பெறுமதி(ரூ.) |
|---|---|---|
| A - ரூ. 175 000 விற்பனை விலையைக் கொண்டுள்ள கனினியொன்று பாடசாலையொன்றிற்கு நன்கொடை. இதன் கிரயம் ரூ. 150 000 ஆகும். | .................. | .................. |
| B - உரிமையாளரால் பயன்படுத்தப்பட்ட பிரதி செய்யும் இயந்திரமொன்று நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இந்த இயந்திரத்தின் கிரயமானது ரூ. 750 000 ஆக இருந்ததுடன் இதனை நிறுவனத்தில் முதலீடு செய்யும்போது அதன் நியாயப் பெறுமதி ரூ. 500 000 ஆக இருந்தது. | .................. | .................. |

**34.** 'மதுரா ரேடர்ஸ்' ஆனது 01.03.2022 இல் வியாபாரமொன்றை ஆரம்பித்தது. இது அனைத்து விற்பனைகளையும் பட்டியல் விலையிலிருந்து 20% வியாபாரக் கழிவுடன் கடன் அடிப்படையில் விற்பனை செய்கிறது. கடன்பட்டோருக்கு விற்பனைத் திகதியிலிருந்து ஒரு மாத கடன் தவணைக்காலம் வழங்கப்படுகின்றது. கடன்பட்டோர் தமது மீதிகளை விற்பனைத் திகதியிலிருந்து 15 நாட்களுக்குள் தீர்ப்பார்களாயின் 10% காசுக் கழிவு வழங்கப்படும்.

விற்பனைகள் மற்றும் கடன்பட்டோரால் தீர்க்கப்பட்ட தொகைகளின் விபரம் கீழே தரப்பட்டுள்ளன.

| விற்பனைத் திகதி | விற்ற பொருட்களின் பட்டியல் விலை (ரூ.' 000) | 2022 மார்ச் மாதத்தில் கடன்பட்டோரால் தீர்க்கப்பட்டவற்றின் விகிதாசாரம் (%) |
|---|---|---|
| 10.03.2022 | 5 000 | 60% (இதன் 1/2 ஆனது 15 நாட்களுக்குள் தீர்க்கப்பட்டது) |
| 22.03.2022 | 1 875 | 40% (இது 15 நாட்களுக்குள் தீர்க்கப்பட்டது) |
| | 6 875 | |

**பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.**

(அ) 31.03.2022 இலுள்ளவாறான கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி : ரூ.' 000 ..................

(ஆ) 2022 மார்ச் மாதத்திற்காக இனங்காணப்பட்ட அனுமதித்த கழிவு : ரூ.' 000 ..................

**35.** பின்வரும் பொதுப் பேரேட்டுக் கணக்கு ஒவ்வொன்றுடனும் தொடர்புடைய நிதிக்கூற்றுக்களின் மூலங்களைக் குறிப்பிடுக.

| கணக்கு | நிதிக் கூற்றுக்களின் மூலம் |
|---|---|
| A - கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | .................................... |
| B - திரண்ட பெறுமானத் தேய்வு | .................................... |
| C - பற்றுக்கள் | .................................... |
| D - பெற்ற கழிவுகள் | .................................... |

**36.** ஆடை உற்பத்திக் கம்பனியொன்றின் பின்வரும் நிலைமைகள் ஒவ்வொன்றுக்கும் **மிகவும்** பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கருவினைக் குறிப்பிடுக.

| நிலைமை | கணக்கீட்டு எண்ணக்கரு |
|---|---|
| A - வருட இறுதியிலுள்ள சரக்கின் பெறுமதியானது, கிரயம் மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமதியின் குறைவான தொகையில் மதிப்பிடல் | .................................... |
| B - துணிகள் இருப்பினை நடைமுறைச் சொத்துக்களாகவும் தையல் இயந்திரங்களை நடைமுறையல்லாச் சொத்துக்களாகவும் வகைப்படுத்துதல் | .................................... |
| C - தையல் இயந்திரங்களின் பெறுமானத்தேய்வினை உற்பத்திக் கிரயமாக இனங்காணல் | .................................... |
| D - வாடிக்கையாளர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் காணப்படும் செயல்திறன் கடப்பாடுகளின் திருப்தி அடிப்படையில் விற்பனை வருவாயினை இனங்காணல் | .................................... |

**37.** நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கருச் சட்டகம் (2018) இன்படி பின்வரும் வசனங்களைப் பூர்த்தி செய்க.

A - கடந்தகால நிகழ்வுகளின் விளைவாக ஏற்பட்ட பொருளாதார வளமொன்றினை மாற்றுவதற்கான நிறுவனமொன்றின் நிகழ்காலக் கடப்பாடு .................................... என வரையறுக்கப்படுகின்றது.

B - பொதுநோக்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு வேண்டப்படும் நிறுவனமொன்றானது .................................... என வரையறுக்கப்படுகின்றது.

C - இனங்காணல் நியதிகளுடன் தொடர்புடைய கணக்கீட்டுத் தகவல்களின் இரண்டு தரரீதியான பண்புகள் .................................... மற்றும் .................................... ஆகும்.

* 38 ஆம் 39 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.

ரங்கன் மற்றும் ராகன் ஆகியோர் இலாப நட்டங்களை முறையே 3 : 2 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டு பங்குடமையொன்றை நடாத்தினர். ரங்கன் மற்றும் ராகன் ஆகியோரின் மூலதன மீதிகள் 31.03.2022 இலுள்ளபடி முறையே ரூ. 3 000 000, ரூ. 2 000 000 ஆக இருந்தது. சுதன் என்பவர் 01.04.2022 இல் புதிய பங்காளராகப் பங்குடமையில் அனுமதிக்கப்பட்டார். சுதன் மூலதனத்திற்காக ரூ. 1 500 000 காசினையும் அவரது நன்மதிப்புப் பங்காக ரூ. 500 000 காசினையும் கொண்டுவந்துள்ளார். பங்குடமையின் நன்மதிப்பானது பங்காளர் மூலதனக் கணக்கினூடாகச் சீராக்கம் செய்யப்படுகின்றது. 01.04.2022 இலிருந்து ரங்கன், ராகன், சுதன் ஆகியோர் இலாப நட்டங்களை முறையே 5 : 3 : 2 என்ற விகிதத்தில் பகிர இணங்கியுள்ளனர். 01.04.2022 இல் ரங்கன் மேலதிக மூலதனமாக ரூ. 600 000 கொண்டுவந்துள்ளார்.

**38.** பின்வருவனவற்றைக் குறிப்பிடுக ;

(அ) 01.04.2022 இலுள்ளவாறான பங்குடமையின் நன்மதிப்பு : ரூ. ....................................

(ஆ) நன்மதிப்பைப் பதிவதற்கான நாட்குறிப்புப் பதிவு (விளம்பல் தேவையில்லை)

| விபரம் | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
|---|---|---|
| | | |

**39.** மேற்படி கொடுக்கல்வாங்கல்கள் அனைத்தையும் சீராக்கிய பின் 01.04.2022 இல் உள்ளபடியான பங்காளரின் மூலதனக் கணக்கு மீதிகள் :

(அ) ரங்கன் : ரூ.' 000 ……………………………

(ஆ) ராகன் : ரூ.' 000 ……………………………

(இ) சுதன் : ரூ.' 000 ……………………………

**40.** நிறுவனமொன்று இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் **சரியா (T)** அல்லது **பிழையா (F)** எனக் குறிப்பிடுக.

| | கூற்று | சரி / பிழை |
|---|---|---|
| A - | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் உருப்படியொன்றின் எஞ்சிய பெறுமதியின் மாற்றமானது கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றமொன்றாகக் கருதப்படுகின்றது. | …………… |
| B - | அறிக்கையிடும் காலத்திற்குப் பின்னர் ஆனால் நிதிக்கூற்றுக்களை வழங்குவதற்கு அதிகாரமளிப்பதற்கு முன்னர் சாதாரண பங்குகளுக்காகப் பிரகடனப்படுத்தப்பட்ட பங்குலாபங்களானது அறிக்கையிடும் காலத்தின் இறுதியில் பொறுப்பொன்றாக இனங்காணப்படுகின்றது. | …………… |
| C - | குறிப்பிட்டு அடையாளம் காணும் முறை பொருத்தமற்றதாகக் காணப்படும்போது இருப்புக்களின் கிரயமானது முதல்-உள்-முதல்-வெளி (FIFO) அல்லது நிறையிடப்பட்ட சராசரிக் கிரயச் (WAC) சூத்திரத்தைப் பாவித்து அளவீடு செய்யப்படல் வேண்டும். | …………… |
| D - | நம்பகரமான மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கான சாத்தியம் இல்லாதபோதிலும் நிச்சயமற்ற காலம் அல்லது தொகையின் நிகழ்காலக் கடப்பாடுகளானவை ஏற்பாடுகளாக நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்படுகின்றன. | …………… |

**41.** தர்சன் PLC இன் 31.03.2022 இல் முடிவடைந்த வருடத்துக்கான நிதிக்கூற்றுக்கள் 15.05.2022 இல் வழங்குவதற்கு இயக்குநர்களால் அதிகாரமளிக்கப்பட்டது.

'LKAS 10 - அறிக்கையிடும் காலத்திற்குப் பின்னரான நிகழ்வுகள்' இன்படி 01.04.2022 தொடக்கம் 15.05.2022 வரை இடம்பெற்ற பின்வரும் நிகழ்வுகள் **சீராக்கக்கூடிய** நிகழ்வா அல்லது **சீராக்க முடியாத** நிகழ்வா என்பதைக் குறிப்பிடுக.

| | நிகழ்வு | சீராக்கக் கூடியது / சீராக்க முடியாதது |
|---|---|---|
| A - | 01.01.2022 அன்று கம்பனிக்கெதிராகத் தொடரப்பட்ட சட்ட வழக்கொன்றைத் தீர்ப்பதற்கான கொடுப்பனவு ரூ. 1 500 000 ஐச் செலுத்துவதற்கான நீதிமன்றக் கட்டளை பெறப்பட்டது. எனினும் 31.03.2022 இலுள்ளவாறு இது தொடர்பில் ஏற்பாடு எதுவும் செய்யப்படவில்லை. | …………… |
| B - | 31.03.2022 இலுள்ளவாறான சரக்கிருப்பானது ரூ. 2 000 000 ஆல் மிகையாக மதிப்பிடப்பட்டுள்ளது என வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | …………… |
| C - | 31.03.2022 இல் உள்ளவாறு ரூ. 8 000 000 முன்கொண்டு செல் மீதிகொண்ட இயந்திரமொன்று தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ காரணமாக அழிவுற்றுள்ளது. | …………… |
| D - | ரூ. 10 000 000 ஒதுக்கங்களை மூலதனமாக்கல். | …………… |

**42.** கம்பனியொன்று ரூ. 110 மில்லியன் பெறுமதிகொண்ட கட்டடமொன்றை 01.04.2021 இல் ரூ. 100 மில்லியனிற்கு கொள்வனவு செய்தது. இத்திகதியில் கட்டடத்தின் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலமானது 50 வருடங்களாகவும், இதன் எஞ்சிய பெறுமதி பூச்சியமாகவும் மதிப்பிடப்பட்டிருந்தது. கொள்வனவு செய்த திகதியிலிருந்து இதனை உபயோகப்படுத்தக் கூடியதாக இருந்தபோதிலும் கம்பனியானது 01.07.2021 இலிருந்து கட்டடத்தினைப் பயன்படுத்தத் தொடங்கியது. இக்கட்டடத்தின் நியாயப் பெறுமதியானது 31.03.2022 இல் ரூ. 120 மில்லியனாக இருந்தது.

'LKAS 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்' இன் படி இக்கட்டடத்துக்கான பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(அ) இனங்காணலின்போது எத்தொகையில் கட்டடமானது அளவீடு செய்யப்பட்டுள்ளது:

ரூபா மில்லியன் ……………………………

(ஆ) இக்கட்டடத்தின் பெறுமானத் தேய்வை அளவீடு செய்யத் தொடங்க வேண்டிய திகதி:

……………………………

(இ) பின்வரும் ஒவ்வொரு மாதிரியும் பயன்படுத்தப்படின், 31.03.2022 இலுள்ளவாறு கட்டடத்தின் கொண்டு செல் மீதி:

(i) கிரய மாதிரி : ரூபா மில்லியன் ……………………………

(ii) மீள் மதிப்பீட்டு மாதிரி : ரூபா மில்லியன் ……………………………

**43.** சிந்துஜா PLC மின்சார உபகரணங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. 'LKAS 37 - ஏற்பாடுகள், நிகழ்த்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்' இன்படி இக்கம்பனியின் பின்வரும் நிலைமைகள் ஒவ்வொன்றும் 31.03.2022 இலுள்ளவாறான ஏற்பாடு ஒன்றுக்கா அல்லது நிகழத்தக்க பொறுப்பு ஒன்றுக்கா இட்டுச் செல்லும் என்பதைக் **காரணத்துடன்** குறிப்பிடுக.

A - வாடிக்கையாளர்களால் திருப்பியனுப்பப்படும் குறைபாடுடைய பொருட்களுக்குப் பணத்தைத் திருப்பிச் செலுத்துவது இக் கம்பனியின் கடந்த கால வழமையாகவும், பிரசுரிக்கப்பட்ட கொள்கையாகவும் காணப்படுகிறது. எனினும் இது தொடர்பில் சட்டரீதியான உடன்பாடு எதுவுமில்லை.

B - இக்கம்பனியானது ஆக்கவுரிமை ஒன்றின் சட்டவிரோத பாவனை தொடர்பில் போட்டி நிறுவனம் ஒன்றுடன் பிணக்கு ஒன்றினை நடைமுறையில் கொண்டுள்ளது. சிந்துஜா PLC இற்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுமாயின் கணிசமான இழப்பீடு செலுத்த வேண்டியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

| **நிலைமை** | **ஏற்பாடு / நிகழத்தக்க பொறுப்பு** | **காரணம்** |
|---|---|---|
| A | .................................. | .................................. |
| B | .................................. | .................................. |

**44.** அமலன் PLC ஆனது மின் பிறப்பாக்கிகளை வாடகைக்கு விடும் கம்பனியொன்றாகும். மின்பிறப்பாக்கியின் நாளாந்த வாடகை ரூ. 20 000 ஆகும். 29.03.2022 இல் கம்பனியானது மின்பிறப்பாக்கியொன்றினை சர்மிலா PLC இற்கு 7 நாட்கள் வாடகைக்கு விடுவதற்கு ஒப்பந்தமொன்றைச் செய்துள்ளது. இத்திகதியில் முற்கொடுப்பனவாக ரூ.100 000 கம்பனியால் பெறப்பட்டது. இந்த முற்பணமானது மீளச் செலுத்தக்கூடிய வைப்பான ரூ.50 000 இனையும் கொண்டுள்ளது. மின் பிறப்பாக்கியானது 30.03.2022 அதிகாலையில் சர்மிலா PLC இற்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

'SLFRS 15 - வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்' இன்படி, ஒப்பந்தத்தின் பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(அ) 31.03.2022 இல் முடிவடையும் வருடத்திற்காக இனங்காணப்பட்ட வாடகை வருமானம்: ரூ. ..................................

(ஆ) 31.03.2022 இலுள்ளபடியான இனங்காணப்பட்ட உழைக்கப்படாத வாடகை வருமானம்: ரூ. ..................................

**45.** வியாபாரக் கம்பனியொன்றின் 31.03.2022 இலுள்ளவாறான பரீட்சை மீதியிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

| | ரூ' 000 |
|---|---|
| கடன்பட்டோர் | 4 500 |
| முற்பணச் செலவுகள் | 500 |
| காசும் காசுக்குச் சமமானவைகளும் | 1 500 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 4 000 |
| விற்பனைகள் | 20 000 |

மேலதிக தகவல்கள்:
- 31.03.2022 இலுள்ளவாறு இருப்புக்கள் ரூ. 2 500 000 காணப்பட்டது.
- 01.04.2021 இலுள்ளவாறு கடன்பட்டோர் ரூ. 3 500 000 காணப்பட்டது.
- எல்லா விற்பனைகளும் கடன் அடிப்படையில் செய்யப்படுகின்றன.

**பின்வருவனவற்றைக் குறிப்பிடுக:**

(அ) விரைவுச் சொத்துக்கள் விகிதம் : ..................................

(ஆ) கடன் சேகரிப்புக் காலம் : .................................. நாட்கள்

**46.** உற்பத்தி நிறுவனமொன்றின் மூலப்பொருள் கட்டுப்பாட்டு முறைமையில் பின்வரும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் பயன்படுத்தப்படும் மூல ஆவணங்களை அடையாளம் காண்க.

| **நடவடிக்கை** | **மூல ஆவணம்** |
|---|---|
| A - உற்பத்திப் பகுதியானது களஞ்சியத்திலிருந்து மூலப்பொருட்களை வேண்டுதல். | .................. |
| B - களஞ்சியமானது மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு கொள்வனவு திணைக்களத்தை வேண்டுதல். | .................. |
| C - கொள்வனவுத் திணைக்களமானது விநியோகத்தர் ஒருவரிடமிருந்து மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்யக் கட்டளையொன்றை இடுதல். | .................. |
| D - களஞ்சியமானது விநியோகத்தர் ஒருவரிடமிருந்து மூலப்பொருட்களைப் பெறுதல். | .................. |

**47.** பழரசச் சாலையொன்றின் பின்வரும் கிரய உருப்படிகள் ஒவ்வொன்றினதும் பொருத்தமான வகைப்படுத்தலினை (நேர் / நேரில் மற்றும் மாறும் / நிலையானது) அடையாளம் காண்க.

| கிரய உருப்படி | நேர் / நேரில் | மாறும் / நிலையான |
|---|---|---|
| A - பழங்களுக்கான கிரயம் | ..................... | ..................... |
| B - புதினப் பத்திரிகையில் விளம்பரத்திற்கான கிரயம் | ..................... | ..................... |
| C - பழரசத்தினைத் தயாரிப்பவருக்குச் செலுத்தப்படும் மாதாந்தச் சம்பளம் | ..................... | ..................... |
| D - நகரசபைக்குச் செலுத்தப்பட்ட வருடாந்த அனுமதிக்கட்டணம் | ..................... | ..................... |

**48.** பின்வரும் தகவல்கள் பொருள் ஒன்றை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும் மூலப்பொருள் ஒன்றுடன் தொடர்பானவை.

- ஆகக்கூடிய நுகர்வு (நாளொன்றிற்கு) - 600 கிலோகிராம்
- சராசரி நுகர்வு (நாளொன்றிற்கு) - 400 கிலோகிராம்
- மறுகட்டளைத் தொகை - 16 000 கிலோகிராம்
- சராசரி விநியோகக் காலம் - 40 நாட்கள்
- ஆகக்கூடிய விநியோகக் காலம் - 60 நாட்கள்

பின்வருவனவற்றைக் குறிப்பிடுக:

(அ) மறுகட்டளை மட்டம் : .....................

(ஆ) இழிவுச் சரக்கிருப்பு மட்டம் : .....................

(இ) ஆகக்கூடிய சரக்கிருப்பு மட்டம் : .....................

**49.** தனியார் கம்பனியொன்று பொருளொன்றினை உற்பத்தி செய்து அதனை அலகொன்று ரூ. 500 விலையில் விற்பனை செய்கிறது. இக்கம்பனியின் ஆகக் கூடிய உற்பத்தி இயலளவானது 1250 அலகுகளாகக் காணப்படுவதுடன், இது அடுத்துவரும் காலத்திற்கு 80% இயலளவு மட்டத்தில் செயற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 80% இயலளவு மட்டத்தில் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் பின்வருமாறு இருந்தன.

| | | ரூ. |
|---|---|---|
| நேர் மூலப்பொருள் (அலகொன்றுக்கு) | - | 100 |
| நேர் ஊழியம் (அலகொன்றுக்கு) | - | 50 |
| மொத்த உற்பத்தி மேந்தலைகள் : | | |
| மாறும் | - | 50 000 |
| நிலையான | - | 120 000 |

எல்லா நேர்க் கிரயங்களும் மாறும் கிரயங்கள் எனக் கருதுக.

பின்வருவனவற்றைக் குறிப்பிடுக :

(அ) சமப்பாட்டுப் புள்ளி அலகுகளில் : ..................... அலகுகள்

(ஆ) பாதுகாப்பு எல்லை அலகுகளில் : ..................... அலகுகள்

(இ) விற்பனை விலையானது 10% ஆல் குறைக்கப்படுமாயின் சமப்பாட்டுப் புள்ளி பெறுமதியில் : ரூ. .....................

**50.** கம்பனியொன்று சொத்தொன்றின் கொள்வனவுடன் தொடர்புடைய நீண்டகால முதலீட்டுச் செயற்திட்டமொன்றைக் கருத்திற்கொள்கின்றது. பின்வரும் தகவல்களானவை செயற்திட்ட மதிப்பீட்டு அறிக்கையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

- செயற்றிட்டத்தின் ஆயுட்காலம் — 5 வருடங்கள்
- செயற்றிட்டத்தின் திரும்பப்பெறும் காலம் — 3.5 வருடங்கள்
- செயற்றிட்டத்தின் வருடாந்தச் செயற்பாட்டுத் தேறிய காசு உட்பாய்ச்சல்கள் — ரூ.400 000
- செயற்றிட்டத்தின் முடிவில் சொத்தின் எஞ்சிய பெறுமதி — ரூ.250 000
- செயற்றிட்டத்தின் எதிர்பார்க்கப்படும் தேறிய காசு உட்பாய்ச்சல்களின் நிகழ்காலப் பெறுமதி — ரூ.1 672 000

இச் செயற்றிட்டத்துக்கான மேலதிக தொழிற்படு மூலதனத் தேவை இல்லை எனக் கருதுக.

செயற்றிட்டத்தின் பின்வருவனவற்றைக் குறிப்பிடுக:

(அ) ஆரம்ப முதலீடு : ரூ. .....................

(ஆ) ஐந்தாம் வருடத்தில் மொத்தத் தேறிய காசு உட்பாய்ச்சல் : ரூ. .....................

(இ) தேறிய நிகழ்காலப் பெறுமதி (NPV) : ரூ. .....................

* * *

# க.பொ.த. (உ/த) பரீட்சை - 2022 (2023)

## 33 – கணக்கீடு

## பகுதி I

| வினா இல. | விடை |
|---|---|
| 1 | 5 |
| 2 | 2 |
| 3 | 3 |
| 4 | 5 |

| வினா இல. | விடை |
|---|---|
| 5 | 2 |
| 6 | 2 |
| 7 | 4 |
| 8 | 3 |

| வினா இல. | விடை |
|---|---|
| 9 | 2 |
| 10 | 1 |
| 11 | 4 |

| வினா இல. | விடை |
|---|---|
| 12 | 5 |
| 13 | 3 |
| 14 | 3 |
| 15 | 2 |
| 16 | 4 |

| வினா இல. | விடை |
|---|---|
| 17 | 5 |
| 18 | 2 |
| 19 | 3 |
| 20 | 5 |
| 21 | 2 |

| வினா இல. | விடை |
|---|---|
| 22 | 1 |
| 23 | 5 |
| 24 | 4 |
| 25 | 3 |

| வினா இல. | விடை |
|---|---|
| 26 | 1 |
| 27 | 4 |
| 28 | 3 |
| 29 | 5 |
| 30 | 5 |

**(வினா 1 – 30 இற்கு ஒவ்வொரு சரியான விடைக்கும் 04 புள்ளிகள், மொத்தம் 120 புள்ளிகள்)**

31. A - சரி (01)
B - சரி (01)
C - சரி (01)
D - பிழை
(01)

32. (அ) - 20 000 (02)
(ஆ) - சில்லறைக் காசுக் க/கு வரவு 16 000 (02)
காசுக் க/கு செலவு 16 000

33. A - குறைவு (01) ரூ. 150 000 (01)
B - அதிகரிப்பு (01) ரூ. 500 000 (01)

34. (அ) ரூ. 2 500 (02)
(ஆ) ரூ. 180 (02)

35. A - பொறுப்பு (01)
B - சொத்து (01)
C - உரிமையாண்மை (01)
D - வருமானம் (01)

36. A - முன்னெச்சரிக்கை (01)
B - தொடர்ந்தியங்குதல் (01)
C - இணைதல் (01)
D - தேறல் (01)

37. A - பொறுப்பு (01)
B - அறிக்கையிடல் முழுமைக்கூறு (01)
C - பொருத்தப்பாடு (01) உண்மையான பிரதிநிதித்துவம் (01)

38. (அ) ரூ. 2 500 000 (02)
(ஆ)

| | | | |
|---|---|---|---|
| ரங்கன் | வரவு | 1 250 000 | |
| ராகன் | வரவு | 750 000 | |
| சுதன் | வரவு | 500 000 | |
| ரங்கன் | செலவு | | 1 500 000 |
| ராகன் | செலவு | | 1 000 000 |

(02)

39. (அ) ரூ. 3 850 (02)
(ஆ) ரூ. 2 250 (01)
(இ) ரூ. 1 500 (01)

40. A - சரி (01)
B - பிழை (01)
C - சரி (01)
D - பிழை (01)

41. A - சீராக்கக்கூடியது (01)
B - சீராக்கக்கூடியது (01)
C - சீராக்க முடியாதது (01)
D - சீராக்க முடியாதது (01)

42. (அ) ரூ. 100 மில்லியன் (01)
(ஆ) 01.04.2021 (01)
(இ) (i) ரூ. 98 மில்லியன் (01)
(ii) ரூ. 120 மில்லியன் (01)

43. A - ஏற்பாடு, நிகழ்கால திடமான கடப்பாடு காணப்படல் (02)
B - நிகழத்தக்க பொறுப்பு, சாத்தியமான கடப்பாடு மட்டும் காணப்படல் (02)

44. (அ) ரூ. 40 000 (02)
(ஆ) ரூ. 10 000 (02)

45. (அ) 1.5 தடவைகள் (02)
(ஆ) 73 நாட்கள் (02)

46. A - பொருள் வேண்டுதல்கள் (01)
B - கொள்வனவு வேண்டுதல்கள் (01)
C - கொள்வனவு கட்டளை (01)
D - பொருட்கள் பெற்றதற்கான குறிப்பு (GRN) (01)

47. A - நேர், மாறும் (01)
B - நேரில், நிலையானது (01)
C - நேர், நிலையானது (01)
D - நேரில், நிலையானது (01)

48. (அ) 36 000 கிலோகிராம் (01)
(ஆ) 20 000 கிலோகிராம் (01)
(இ) 48 000 கிலோகிராம் (02)

49. (அ) 400 அலகுகள் (01)
(ஆ) 600 அலகுகள் (01)
(இ) ரூ. 216 000 (02)

50. (அ) ரூ. 1 400 000 (01)
(ஆ) ரூ. 650 000 (01)
(இ) ரூ. 272 000 (02)

(80 புள்ளிகள்)

| | | | |
|---|---|---|---|
| **வினா இல.** | **01 - 30** | **120 புள்ளிகள்** |
| | **31 - 50** | **80 புள்ளிகள்** |
| | | **200 புள்ளிகள்** |

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

ගිණුම්කරණය II
கணக்கீடு II
Accounting II

**33 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

செய்நிரலாக்கத்தகா (Non - Programmable) கணிப்பான்கள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும்.

அறிவுறுத்தல்கள் :

* முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்கும் புதிய தாளில் விடை எழுத ஆரம்பித்தல் வேண்டும்.
* உரிய செய்முறைகள் விடைத்தாளுடன் இணைக்கப்படல் வேண்டும்.
* இவ்வினாத்தாளுக்கு 200 புள்ளிகள் உரித்தாகும்.

1. 31.03.2022 இல் உள்ளவாறான தர்மிதன் PLC இன் சுருக்கிய பரீட்சை மீதியானது கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 80 000 | |
| 01.04.2021 இல் உள்ளவாறான திரண்ட பெறுமானத் தேய்வு: | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | | 11 000 |
| விற்பனைகள் | | 72 200 |
| விற்பனைக் கிரயம் | 43 000 | |
| இருப்பு | 3 250 | |
| ஏனைய வருமானங்கள் | | 1 800 |
| வியாபார வருமதிகள் | 9 100 | |
| வியாபாரக் கொடுக்குமதிகள் | | 5 250 |
| காசும் காசுக்குச் சமமானவைகளும் | 500 | |
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் | | 40 000 |
| 01.04.2021 இல் நிறுத்திவைத்த வருவாய்கள் | | 17 700 |
| மீள் மதிப்பீட்டு மிகை - கட்டடங்கள் | | 5 000 |
| நிர்வாகச் செலவுகள் | 8 800 | |
| விநியோகக்கிரயம் | 6 200 | |
| நிதிக்கிரயம் | 1 500 | |
| ஏனைய செலவுகள் | 600 | |
| செலுத்திய வருமானவரி | 900 | |
| 01.04.2021 இல் வருமான வரிக்கான ஏற்பாடு | | 400 |
| இழப்பீட்டுக்கான ஏற்பாடு | | 500 |
| | 153 850 | 153 850 |

மேலதிக தகவல்கள்:

31.03.2022 இல் முடிவடைந்த வருடத்துக்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முன்னர் பின்வருவனவற்றுக்கான சீராக்கங்கள் செய்யப்படல் வேண்டும்.

(i) 31.03.2022 இல் உள்ள இருப்பானது மூன்று உருப்படிகளைக் கொண்டுள்ளது. அவற்றின் கிரயமும், தேறிய தேறக்கூடிய பெறுமதியும் பின்வருமாறு.

| உருப்படி | கிரயம்(ரூ.'000) | தேறிய தேறக்கூடிய பெறுமதி(ரூ.'000) |
|---|---|---|
| A | 1 250 | 1 600 |
| B | 1 200 | 1 100 |
| C | 900 | 550 |
| | 3 350 | 3 250 |

இருப்புக்களை அவற்றின் கிரயம் மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமதியில் எது குறைகளோ அதில் அளவீடு செய்கையில் உருப்படிக்கு உருப்படி என்ற அடிப்படையைப் பிரயோகிப்பது கம்பனியின் கொள்கையாகும். எனினும் 31.03.2022 இல் உள்ளவாறான இருப்பானது கம்பனியின் கொள்கைக்கு மாறாக மூன்று உருப்படிகள் அனைத்தினதும் மொத்தக்கிரயத்தையும், மொத்தத் தேறிய தேறக்கூடிய பெறுமதியையும் ஒப்பீடு செய்து அளவீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கமைய இருப்பின் கிரயமானது ரூ. 100 000 ஆல் பதிவளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், அது ஏனைய செலவுகளுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ii) பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ள இழப்பீட்டுக்கான ஏற்பாடானது, வாடிக்கையாளர் ஒருவரால் கம்பனிக்கெதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றுடன் தொடர்புடையதாகும். நீதிமன்றத் தீர்ப்பானது 01.05.2022 இல் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி கம்பனி ரூ. 700 000 இழப்பீட்டைச் செலுத்தியது. கம்பனியின் இயக்குநர்கள் நிதிக்கூற்றுக்களை 01.06.2022 இல் வழங்குவதற்கு அதிகாரமளித்திருந்தனர்.

(iii) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் உள்ளடக்கமும், அவற்றின் திரண்ட பெறுமானத் தேய்வுகளும் பின்வருமாறு:

| விபரம் | 31.03.2022 இல் உள்ளவாறு கிரயம் / பெறுமதி (ரூ.'000) | 01.04.2021 இல் உள்ளவாறு திரண்ட பெறுமானத் தேய்வு (ரூ.'000) |
|---|---|---|
| காணி | 30 000 | — |
| கட்டடங்கள் | 25 000 | 2 000 |
| மோட்டார் வாகனங்கள் | 15 000 | 5 000 |
| அலுவலக உபகரணங்கள் | 10 000 | 4 000 |
| | 80 000 | 11 000 |

அனைத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களும் நிர்வாக நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. 31.03.2022 இல் முடிவடைந்த வருடத்துக்கான பெறுமானத் தேய்வு செய்யப்படல் வேண்டும். இச் சொத்துக்களுக்கு இறுதிப் பெறுமதி இல்லை. (பெறுமானத் தேய்வைக் கணிப்பீடு செய்கையில் மேலதிக தகவல்கள் (iv), (v) மற்றும் (vi) ஐக் கருத்திற் கொள்ளவும்).

(iv) கட்டடங்களும் மோட்டார் வாகனங்களும் 31.03.2019 இல் முதல் தடவையாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அவை புத்தகங்களில் சரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | கட்டடங்கள் | மோட்டார் வாகனங்கள் |
|---|---|---|
| மீள்மதிப்பீட்டு மிகை (ரூ.'000) | 5 000 | — |
| மீள்மதிப்பீட்டுக் குறை (ரூ.'000) | — | 1 000 |
| முதல் தடவை மீள்மதிப்பீடு செய்த திகதியிலிருந்து எஞ்சிய பயன்பாட்டு ஆயுட்காலம் (வருடங்கள்) | 25 | 6 |

கட்டடங்களும் மோட்டார் வாகனங்களும் 31.03.2022 இல் **இரண்டாவது தடவையாகப்** பின்வருமாறு மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

| | **கட்டடங்கள்** | **மோட்டார் வாகனங்கள்** |
|---|---|---|
| மீள்மதிப்பீட்டுத் தொகை (ரூ.'000) | 20 000 | 7 000 |

எவ்வாறாயினும் கட்டடங்களினதும் மோட்டார் வாகனங்களினதும் இரண்டாவது தடவையிலான மீள்மதிப்பீடு தொடர்பில் எவ்வித கணக்கீட்டுப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை. 31.03.2019 இற்குப் பின்னர் கட்டடங்கள் மற்றும் மோட்டார் வாகனங்களின் கொள்வனவோ அல்லது அகற்றலோ இடம்பெறவில்லை.

(v) 01.10.2021 இல் சில அலுவலகக் கணினிகள் ரூ. 1 600 000 க்கு விற்கப்பட்டன. இக் கணினிகள் 01.10.2020 இல் ரூ. 2 000 000 க்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. கம்பனியானது அலுவலக உபகரணத்துக்கு நேர்கோட்டு முறையைப் பயன்படுத்திக் கிரயத்தில் வருடத்திற்கு 20% பெறுமானத் தேய்வு செய்கின்றது. இக் கணினிகளின் விற்பனை மூலம் பெறப்பட்ட காசானது, காசுக் கணக்கில் வரவிலும், ஏனைய வருமானக் கணக்கில் செலவிலும் வைக்கப்பட்டுள்ளது. இந்த விற்பனை தொடர்பில் வேறெந்தக் கணக்கீட்டுப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(vi) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பின்வரும் உருப்படிகள் இவ்வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவை சரியாகப் பதியப்பட்டிருந்தன.

| கொள்வனவுத் திகதி | உருப்படி | கிரயம்(ரூ.'000) |
|---|---|---|
| 01.07.2021 | காணி | 8 000 |
| 01.10.2021 | பிரதியெடுக்கும் இயந்திரம் | 1 500 |

(vii) இயக்குநர்களின் கட்டணம் ரூ. 1 900 000 மற்றும் சாதாரண பங்குதாரர்களுக்குச் செலுத்திய இடைக்காலப் பங்குலாபம் ரூ. 1 100 000 என்பன நிர்வாகச் செலவுகளுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(viii) கம்பனி 01.04.2021 இல் குத்தகை உடன்பாடொன்றின் கீழ் கட்டடமொன்றின் சொத்துப் பாவனை உரிமையைப் பெற்றுக் கொண்டது. இக்குத்தகை தொடர்பான விபரங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| குத்தகைக் காலம் | 5 வருடங்கள் |
| கட்டடத்தின் பயன்தரு ஆயுட்காலம் | 25 வருடங்கள் |
| சொத்துப்பாவனை உரிமையின் ஆரம்பக் கிரயம் (ரூ.'000) | 2 750 |
| குத்தகைப் பொறுப்பின் ஆரம்பத் தொகை (ரூ.'000) | 2 750 |
| வருடாந்தக் குத்தகைத் தவணைக் கட்டணம் (ரூ.'000) | 820 |
| 31.03.2022 இல் முடிவடையும் வருடத்துக்கான குத்தகை வட்டி (ரூ.'000) | 412 |
| 31.03.2023 இல் முடிவடையும் வருடத்துக்கான குத்தகை வட்டி (ரூ.'000) | 350 |

குத்தகைக் கால முடிவில் சொத்துப் பாவனை உரிமையின் உடைமையானது கம்பனிக்கு மாற்றப்படுவதில்லை. குத்தகைத் தவணைக் கட்டணம் ஒவ்வொரு வருடமும் மார்ச் 31 இல் செலுத்தப்படல் வேண்டும். இதன்படி, முதலாவது வருடாந்தக் குத்தகைத் தவணைக் கட்டணம் 31.03.2022 இல் செலுத்தப்பட்டிருந்தது. இது தவறுதலாக விநியோகக் கிரயங்களுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இக்குத்தகை தொடர்பில் வேறு எந்தக் கணக்கீட்டுப் பதிவும் மேற்கொள்ளப்படவில்லை. சொத்துப்பாவனை உரிமையானது கம்பனியின் நிதிநிலைமைக் கூற்றின் முகப்பில் தனியான விடயமாக வெளிப்படுத்தப்படுகின்றது.

(ix) பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ள செலுத்திய வருமான வரியானது சென்ற வருடத்துக்குச் செலுத்திய ரூ. 320 000 ஐயும், நடைமுறை வருடத்தின் முதல் மூன்று காலாண்டுகளுக்காகச் செலுத்திய வரியையும் உள்ளடக்கியுள்ளது. 31.03.2022 இல் முடிவடையும் வருடத்துக்கான மொத்த வருமான வரிப் பொறுப்பு ரூ. 1 200 000 என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது:

'LKAS 1 - நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்' இன்படி பிரசுர நோக்கத்துக்காக தர்மிதன் PLC இன் பின்வரும் நிதிக்கூற்றுக்கள் (குறிப்புக்கள் உள்ளடங்கலாக):

(1) 31.03.2022 இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்று

(2) 31.03.2022 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று

(3) 31.03.2022 இல் முடிவடைந்த வருடத்துக்கான உரிமையாண்மை மாற்றல் கூற்று

(மொத்தம் 40 புள்ளிகள்)

**வினா இல. 1**

**(1)**

**தர்மிதன் PLC**

**31.03.2022 இல் முடிவடையும் வருடத்துக்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக்கூற்று** (01)

| | குறிப்பு | ரூ.'000 | | |
|---|---|---|---|---|
| விற்பனைகள் | | 72 200 | | |
| விற்பனைக் கிரயம் | | (43 000) | | |
| **மொத்த இலாபம்** | | **29 200** | | |
| ஏனைய வருமானம் | | 200 | (01) | செய்கை 1 |
| விநியோகக் கிரயம் | | (5 380) | (01) | செய்கை 2 |
| நிர்வாக செலவுகள் | | (13 400) | (05) | செய்கை 3 |
| ஏனைய செலவுகள் | | (1 650) | (03) | செய்கை 4 |
| நிதிக் கிரயம் | | (1 912) | (01) | செய்கை 5 |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | 01 | 7 058 | | |
| வருமானவரிச் செலவுகள் | 02 | (1 120) | (01) | |
| **காலப்பகுதிக்கான இலாபம்** | | **5 938** | | |
| **ஏனைய முற்றுமடங்கிய வருமானம்** | | | | |
| காணி மீள்மதிப்பீட்டு மிகையில் மாற்றம் | | (2 000) | (01) | |
| காலப்பகுதிக்கான மொத்த முற்றுமடங்கிய வருமானம் | | (01) 3 938 | | |

குறிப்பு 1

பின்வரும் செலவுகள் உட்பட செலவுகளைக் கழித்த பின்னர் வருடத்திற்கான இலாபமானது கணிக்கப்பட்டுள்ளது

| | ரூ.'000 |
|---|---|
| இயக்குனர்களின் கட்டணம் | 1 900 |
| பெறுமானத் தேய்வு | 5 700 |
| மீள்மதிப்பீட்டுக் குறை | 500 |

[ஏதாவது இரண்டு விடயங்களிற்கு ஆகக்கூடியது **01** புள்ளி]

**குறிப்பு 2 வருமானவரி**

| | | |
|---|---|---|
| வருடத்திற்கான வருமானவரி | 1 200 | |
| மேலதிக ஒதுக்கம் | (80) | 01 |
| | 1 120 | |

**(16 புள்ளிகள்)**

| | ரூ.'000 | |
|---|---|---|
| **செய்கை 1 ஏனைய வருமானம்** | | |
| மீதி | 1 800 | |
| அலுவலக உபகரண விற்பனைத் தொகை | (1 600) | 01 |
| அகற்றலின் போது ஆதாயம் | - | |
| **மொத்தம்** | **200** | |

**செய்கை 2 விநியோகக் கிரயம்**

| | | |
|---|---|---|
| மீதி | 6 200 | |
| குத்தகைத் தவணைக் கட்டணம் செலுத்தியது | (820) | 01 |
| **மொத்தம்** | **5 380** | |

**செய்கை 3 நிர்வாக செலவுகள்**

| | | |
|---|---|---|
| மீதி | 8 800 | |
| பெறுமானத் தேய்வு - கட்டடங்கள் | 1 000 | 01 |
| பெறுமானத் தேய்வு - மோட்டார் வாகனங்கள் | 2 500 | 01 |
| பெறுமானத் தேய்வு - அலுவலக உபகரணங்கள் | 1 650 | 01 |
| இடைக்காலப் பங்குலாபம் | (1 100) | 01 |
| பெறுமானத் தேய்வு - சொத்து பாவனை உரிமை | 550 | 01 |
| **மொத்தம்** | **13 400** | |

**செய்கை 4 ஏனைய செலவுகள்**

| | | |
|---|---|---|
| மீதி | 600 | |
| பதிவழிக்கப்பட்ட இருப்பு | (100) | |
| பதிவழிக்கப்பட்ட சரியான இருப்பு | 450 | 01 |
| கோரிக்கைக்கான சீராக்கம் | 200 | 01 |
| மீள்மதிப்பீட்டுக் குறை | 500 | 01 |
| **மொத்தம்** | **1 650** | |

செய்கை 5 நிதிக் கிரயம்

| | | |
|---|---|---|
| மீதி | 1 500 | |
| குத்தகை வட்டி | 412 | 01 |
| மொத்தம் | 1 912 | |

**தர்மிதன் PLC**

31.03.2022 இல் முடிவடையும் வருடத்திற்கான உரிமையாண்மை மாற்றல்கூற்று

**ரு.'000**

| | கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் | மீள்மதிப்பு ஒதுக்கம் | நிறுத்தி வைத்த வருவாய்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01.04.2021 இலுள்ளவாறான மீதி | 40 000 | 5 000 | 17 700 | 62 700 |
| மொத்த முற்றுமடங்கிய வருமானம் | | (01) (2 000) | (01) 5 938 | 3 938 |
| இடைக்காலப் பங்கிலாபம் | | | (1 100) | (01) (1 100) |
| **31.03.2022 இலுள்ளவாறான மீதி** | **40 000** | **3 000** | **22 538** | **71 476** |

**(03 புள்ளிகள்)**

(3)

## தர்மிதன் PLC
## 31.03.2022 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று

(01)

ரூ.'000

| | குறிப்பு | | |
|---|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் | 03 | (01) 59 750 | |
| சொத்து பாவனை உரிமை | 04 | (01) 2 200 | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்பு | | 2 900 | (01) செய்கை 6 |
| வியாபார வருமதிகள் | செய்கை 5 | 9 100 | * |
| காசும் காசுக்குச் சமனானவையும் | | 500 | * |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **74 450** | |
| **உரிமையாண்மை** | | | |
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் | | 40 000 | * |
| **ஒதுக்கங்கள்** | | | |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | (01) 3 000 | |
| நிறுத்திவைத்த வருவாய்கள் | | (01) 22 538 | |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | | |
| குத்தகைப் பொறுப்பு | | (01) 1 872 | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வியாபார கொடுக்குமதிகள் | | 5 250 | * |
| குத்தகைப் பொறுப்பு | | (01) 470 | |
| செலுத்த வேண்டிய வருமான வரி | | 620 | (01) |
| கோரிக்கைக்கான ஏற்பாடு | | 700 | * |
| **உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்களின் மொத்தம்** | | **74 450** | |

[ஒவ்வொரு இரண்டு உருப்படிகளிற்கும் **01** புள்ளி வீதம் ஆகக்டியது **02** புள்ளிகள்]

| **செய்கை 6 இருப்பு** | | |
|---|---|---|
| மீதி | 3 250 | |
| சரியான இருப்பு சீராக்கம் | (450) | 01 |
| பதிவழிக்கப்பட்ட இருப்பு | 100 | |
| **திருத்திய மீதி** | **2 900** | |

குறிப்பு 3: ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (ரூ.'000)

| கிரயம் / பெறுமதி | காணி | கட்டடங்கள் | மோட்டார் வாகனங்கள் | அலுவலக உபகரணங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 01.04.2021 இல் மீதி (01) | 22 000 | 25 000 | 15 000 | 8 500 | 70 500 |
| சேர்ப்புக்கள் | 8 000 | | | 1 500 (01) | 9 500 |
| மீள்மதிப்பீட்டு குறை | | (2 000) (01) | (500) | (01) | (2 500) |
| திரட்டிய பெறுமானத் தேய்வு மாற்றல் | | (3 000) | (7 500) | | (10 500) |
| அகற்றல் | | | (01) | (2 000) (01) | (2 000) |
| **31.03.2022 இல் மீதி** | **30 000** | **20 000** | **7 000** | **8 000** | **65 000** |
| **திரண்ட பெறுமானத் தேய்வு** | **காணி** | **கட்டடங்கள்** | **மோட்டார் வாகனங்கள்** | **அலுவலக உபகரணங்கள்** | **மொத்தம்** |
| 01.04.2021 இல் மீதி | | 2 000 | 5 000 | 4 000 | 11 000 |
| வருடத்திற்கான பெறுமானத் தேய்வு | | (01) 1 000 | 2 500 | 1 650 | 5 150 |
| திரண்ட பெறுமானத் தேய்வு மாற்றல் | | (3 000) | (7 500) | | (10 500) |
| அகற்றல்கள் | | | (01) | (400) (01) | (400) |
| **31.03.2022 இல் மீதி** | **---** | **---** | **---** | **5 250** | **5 250** |
| 31.03.2022 இல் கொண்டு செல் தொகை | **30 000** | **20 000** | **7 000** | **2 750** | **59 750** |

குறிப்பு 04: சொத்து பாவனை உரிமை (ரூ.'000)

| கிரயம் | சொத்து பாவனை உரிமை |
|---|---|
| மதிப்பிடுகையில் கிரயம் | 2 750 |
| திரண்ட பெறுமானத் தேய்வு | (01) (550) |
| 31.03.2021 இல் மீதி | 2 200 |

**(21 புள்ளிகள்)**

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

**வினா இல. 1**

| பகுதி | (1) | (2) | (3) | மொத்தம் |
|---|---|---|---|---|
| **ஒதுக்கப்பட்ட புள்ளிகள்** | 16 | 03 | 21 | **40** |

2. (அ) அனுராதா வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியானது சீமெந்துக்கற்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளது. பின்வரும் தகவல்கள் 2022 மார்ச் மாதத்தில் உற்பத்தி செய்த சீமெந்துக்கற்களுக்குப் பயன்படுத்திய மூலப்பொருள் ஒன்றுடன் தொடர்பானவை.

| திகதி | விபரம் | தொகை (கிலோகிராம்) | கிலோகிராம் ஒன்றுக்கான விலை |
|---|---|---|---|
| 01 | ஆரம்ப மூலப்பொருள் இருப்பு | 5 000 | ரூ. 25 |
| 10 | மூலப்பொருள் கொள்வனவு | 20 000 | ரூ. 30 |
| 15 | சீமெந்துக்கற்களை உற்பத்தி செய்ய வழங்கப்பட்ட மூலப்பொருட்கள் | 16 000 | ? |
| 20 | மூலப்பொருள் கொள்வனவு | 30 000 | ரூ. 40 |
| 28 | சீமெந்துக்கற்களை உற்பத்தி செய்ய வழங்கப்பட்ட மூலப்பொருட்கள் | 10 000 | ? |

**வேண்டப்படுவது:**
பின்வரும் ஒவ்வொரு முறையின் அடிப்படையிலும் 2022 மார்ச் மாதத்திற்கான மூலப்பொருளின் களஞ்சியப் பேரேட்டுக்கணக்கு:
(1) முதல் - உள் - முதல் - வெளி (FIFO) முறை
(2) நிறையிடப்பட்ட சராசரிக் கிரய (WAC) முறை

**(16 புள்ளிகள்)**

(ஆ) உற்பத்திக் கம்பனியொன்று 'X' மற்றும் 'Y' என்னும் இரண்டு பொருட்களை உற்பத்தி செய்கிறது. இக்கம்பனியானது இப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கு 'ஒன்றுசேர்த்தல்' மற்றும் 'முடிவுறுத்தல்' எனும் இரண்டு உற்பத்திக் கிரய நிலையங்களையும், 'களஞ்சியம்' எனும் சேவைக்கிரய நிலையத்தையும் கொண்டுள்ளது. இவ் அனைத்துக் கிரய நிலையங்களும் ஒரே இடத்தில் காணப்படுகின்றன. அடுத்த நிதியாண்டுக்கான பாதீடு செய்யப்பட்ட உற்பத்தி மேந்தலைகள் கீழே தரப்படுகின்றன.

| | ரூ. '000 |
|---|---|
| ஒதுக்கீடு செய்யப்பட்ட மேந்தலைகள்: | |
| ஒன்றுசேர்த்தல் | 930 |
| முடிவுறுத்தல் | 760 |
| களஞ்சியம் | 40 |
| ஏனைய மேந்தலைகள்: | |
| தொழிற்சாலை வாடகை | 100 |
| மின்சாரம் | 300 |
| இயந்திரப் பெறுமானத் தேய்வு | 450 |
| தகவல் முறைமையின் பராமரிப்புக் கிரயம் | 420 |

மேலதிக தகவல்கள்:

(i) கிரய நிலையங்களுடன் தொடர்பான தகவல்கள்:

| | ஒன்றுசேர்த்தல் | முடிவுறுத்தல் | களஞ்சியம் |
|---|---|---|---|
| கிலோ வாற்ஸ் மணித்தியாலங்கள் | 10 000 | 8 000 | 2 000 |
| இயந்திரக் கிரயம் (ரூ. '000) | 80 | 40 | – |
| தளப்பரப்பு (சதுர மீற்றர்கள்) | 1 500 | 750 | 250 |
| தகவல் முறைமையினூடாகத் தயாரிக்கப்படும் அறிக்கைகளின் எண்ணிக்கை | 50 | 150 | 10 |

(ii) களஞ்சியத்தின் சேவையானது ஒன்றுசேர்த்தல் மற்றும் முடிவுறுத்தல் கிரய நிலையங்களுக்கிடையே முறையே 3 : 2 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது.

(iii) ஒன்றுசேர்த்தல் மற்றும் முடிவுறுத்தல் கிரய நிலையங்களின் மேந்தலைகளானது உற்பத்திப் பொருட்களுக்கு முறையே இயந்திர மணித்தியால அடிப்படை மற்றும் ஊழிய மணித்தியால அடிப்படையில் உறிஞ்சப்படுகிறது. ஒன்றுசேர்த்தல் கிரய நிலையத்தின் பாதீடு செய்யப்பட்ட இயந்திர மணித்தியாலங்கள் 40 000 ஆகவும், முடிவுறுத்தல் கிரய நிலையத்தின் பாதீடு செய்யப்பட்ட ஊழிய மணித்தியாலங்கள் 20 000 ஆகவும் காணப்பட்டது.

(iv) பின்வரும் தகவல்கள் வருடமொன்றில் கம்பனியால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுடன் தொடர்புடையவை:

| | உற்பத்திப் பொருள் X | உற்பத்திப் பொருள் Y |
|---|---|---|
| அலகொன்றிற்கான நேர் மூலப்பொருட் கிரயம் (ரூ.) | 310 | 340 |
| அலகொன்றிற்கான நேர் ஊழியம் (ரூ.) | 150 | 200 |
| அலகொன்றை உற்பத்தி செய்வதற்கான உண்மையான மணித்தியாலங்கள்: | | |
| - இயந்திர மணித்தியாலங்கள் | 5 | 2 |
| - ஊழிய மணித்தியாலங்கள் | 2 | 4 |
| உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை | 1 000 | 1 500 |

(v) உற்பத்திப் பொருட்களின் விற்பனை விலைகள் பின்வருமாறு தீர்மானிக்கப்படுகின்றன:
- உற்பத்திப் பொருள் X - அலகொன்றிற்கான உற்பத்திக் கிரயத்தில் 20% இலாபம் வைத்து.
- உற்பத்திப் பொருள் Y - அலகொன்றிற்கான விற்பனை விலையில் 10% இலாபம் வைத்து.

வேண்டப்படுவது:

(1) பகிர்வுக்கான அடிப்படைகளைத் தெளிவாகக் காட்டக்கூடியதான மேந்தலைப் பகுப்பாய்வு அட்டவணை (களஞ்சிய மேந்தலைகளின் மீள் பகிர்வு உட்பட)

(2) ஒவ்வொரு உற்பத்திக் கிரய நிலையத்துக்குமான மேந்தலை உறிஞ்சல் வீதம்

(3) உற்பத்திப் பொருட்கள் 'X' மற்றும் 'Y' இற்கான பின்வருவன:

(i) அலகொன்றுக்கான உற்பத்திக் கிரயம்

(ii) அலகொன்றுக்கான விற்பனை விலை

(24 புள்ளிகள்)
(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா இல. 2

(அ) (1)

### களஞ்சிய பேரேட்டு கணக்கு (முதல் உள் முதல் வெளி முறையில்)

| திகதி | விபரம் | பெறுவனவுகள் | | | வழங்கல்கள் | | | மீதி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தொகை | விலை | பெறுமதி | தொகை | விலை | பெறுமதி | தொகை | பெறுமதி |
| 01.08.2022 | ஆரம்ப இருப்பு | | | | | | | 5 000 | 125 000 (01) |
| 10.08.2022 | கொள்வனவுகள் | 20 000 | 30 | 600 000 | (01) | | | 25 000 | 725 000 |
| 15.08.2022 | வழங்கல் | | | | 5 000<br>11 000 | 25<br>30 | 125 000<br>330 000 | (01)<br>9 000 | 270 000 |
| 20.08.2022 | கொள்வனவுகள் | 30 000 | 40 | 1 200 000 | (01) | | | (01) 39 000 | 1 470 000 |
| 28.08.2022 | வழங்கல் | | | | 9 000<br>1 000 | 30<br>40 | 270 000<br>40 000 | (01)<br>(01) | (01) |
| 31.08.2022 | இறுதி இருப்பு | | | | | | | 29 000 | 1 160 000 |

(08 புள்ளிகள்)

(2)

### களஞ்சிய பேரேட்டு கணக்கு (நிறையிடப்பட்ட சராசரிக் கிரய முறையில்)

| திகதி | விபரம் | பெறுவனவுகள் | | | வழங்கல்கள் | | | மீதி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தொகை | விலை | பெறுமதி | தொகை | விலை | பெறுமதி | தொகை | பெறுமதி |
| 01.08.2022 | ஆரம்ப இருப்பு | | | | | | | 5 000 | 125 000 (01) |
| 10.08.2022 | கொள்வனவுகள் | 20 000 | 30 | 600 000 | (01) (01) | | (01) | 25 000 | 725 000 |
| 15.08.2022 | வழங்கல் | | | | 16 000 | 29.00 | 464 000 | 9 000 | 261 000 |
| 20.08.2022 | கொள்வனவுகள் | 30 000 | 40 | 1 200 000 | (01) (01) | | (01) | 39 000 | 1 461 000 |
| 28.08.2022 | வழங்கல் | | | | 10 000 | 37.46 | 374 615 | | |
| 31.08.2022 | இறுதி இருப்பு | | | | | | | 29 000 | 1 086 385 (01) |

(08 புள்ளிகள்)

**(ஆ) (1) மேந்தலைப் பகுப்பாய்வு அட்டவணை** **(ரூ.'000)**

| விபரம் | பகிர்விற்கான அடிப்படை | மொத்தம் | ஒன்று சேர்த்தல் | முடிவுறுத்தல் | களஞ்சியம் |
|---|---|---|---|---|---|
| நேரடியாக ஒதுக்கியது | நேரடி (01) | 1 730 | 930 | 760 | 40 (01) |
| வாடகை | தளப்பரப்பு (01) | 100 | 60 | 30 | 10 (01) |
| மின்கட்டணம் | கிலோவாற்று மணி (01) | 300 | 150 | 120 | 30 (01) |
| இயந்திர பெறுமானத் தேய்வு | இயந்திரக் கிரயம் (01) | 450 | 300 | 150 | (01) |
| தகவல் முறைமை | அறிக்கைகளின் எண்ணிக்கை (01) | 420 | 100 | 300 | 20 (01) |
| | | 3 000 | 1 540 | 1 360 | 100 |
| களஞ்சிய மேந்தலை மீள் பகிர்வு | 3 : 2 | 100 | (01) 60 | (01) 40 | (100) |
| **மொத்த உற்பத்தி மேந்தலைகள்** | | **3 000** | **1 600** | **1 400** | |

**(12 புள்ளிகள்)**

| **(2) மேந்தலை உறிஞ்சல் வீதம்** | **ஒன்றுசேர்த்தல்** | **முடிவுறுத்தல்** |
|---|---|---|
| **மேந்தலை உறிஞ்சல் வீதம்** | **40** (02) | **70** (02) |
| | இயந்திர மணித்தியால மொன்றிற்கான உறிஞ்சல் வீதம் | ஊழிய மணித்தியால மொன்றிற்கான உறிஞ்சல் வீதம் |
| | | **(04 புள்ளிகள்)** |
| மொத்த உற்பத்தி மேந்தலைகள் | 01 1 600 | 01 1 400 |
| மணித்தியாலங்களின் எண்ணிக்கை | 40 01 | 20 01 |

| (3) உற்பத்திக் கிரயம் - உற்பத்திப் பொருள் X | | | | |
|---|---|---|---|---|
| | | | 800 (03) | |
| நேர் மூலப்பொருள் | | 310 | | |
| நேர் கூலி | | 150 | 460 | 01 |
| உற்பத்தி மேந்தலைகள் | | | | |
| ஒன்று சேர்த்தல் | 5 | 40 | 200 | 01 |
| முடிவுறுத்தல் | 2 | 70 | 140 | 01 |
| **(i) மொத்த உற்பத்திக் கிரயம்** | | | **800** | |
| | | | | |
| **(ii) விற்பனை விலை** | | 01 | **960** | (01) |
| இலாப எல்லை | | 800 * 20% | 160 | |

| **(3) உற்பத்திக் கிரயம் - உற்பத்திப் பொருள் Y** | | | **900** | (03) |
|---|---|---|---|---|
| | | | | |
| நேர் மூலப்பொருள் | | 340 | | |
| நேர் கூலி | | 200 | 540 | 01 |
| உற்பத்தி மேந்தலைகள் | | | | |
| ஒன்று சேர்த்தல் | 2 | 40 | 80 | 01 |
| முடிவுறுத்தல் | 4 | 70 | 280 | 01 |
| **(i) மொத்த உற்பத்திக் கிரயம்** | | | **900** | |
| | | | | |
| **(ii) விற்பனை விலை** | | 01 | **1 000** | (01) |
| இலாப எல்லை | | 900 * 10% | 100 | **(08 புள்ளிகள்)** |

**(08 புள்ளிகள்)**

## வினா இல. - 2

| பகுதி | (1) | (2) | (3) | மொத்தம் |
|---|---|---|---|---|
| (அ) | 16 | --- | --- | **16** |
| (ஆ) | 12 | 04 | 08 | **24** |
| | | | | **40** |

3. (அ) கர்ணன் நிறுவனமானது சில்லறை வணிகமொன்றை நடத்துகின்றது. இந்த நிறுவனத்தின் 01.03.2022 இல் உள்ளவாறான ஆரம்ப மீதிகளும், 2022 மார்ச் மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களும் கணக்கீட்டுச் சமன்பாட்டு வடிவத்தில் கீழே தரப்பட்டுள்ளன.

(ரூ.'000)

| மீதி/ கொடுக்கல் வாங்கல்கள் இல. | சொத்துக்கள் = | | | | பொறுப்புக்கள் + | | உரிமையாண்மை |
|---|---|---|---|---|---|---|---|
| | காரியாலய உபகரணங்கள் | இருப்பு | வியாபாரக் கடன்பட்டோர் | காசு | வியாபாரக் கடன்கொடுத்தோர் | வங்கிக் கடன் | |
| ஆரம்ப மீதி | 500 | 750 | 60 | 600 | 150 | 400 | 1 360 |
| 1 | +100 | | | -100 | | | |
| 2 | | +160 | | | +160 | | |
| 3 | | -350 | | +500 | | | +150 |
| 4 | | -300 | +400 | | | | +100 |
| 5 | | | | -150 | | -130 | -20 |
| 6 | | | | -140 | -150 | | +10 |
| 7 | | | -60 | +50 | | | -10 |
| 8 | | +200 | | -60 | +140 | | |
| 9 | | -170 | +160 | +30 | | | +20 |
| 10 | +200 | | | | | | +200 |
| 11 | | -60 | | | | | -60 |
| 12 | -100 | | | +150 | | | +50 |
| இறுதி மீதி | 700 | 230 | 560 | 880 | 300 | 270 | 1 800 |

**வேண்டப்படுவது:**

(1) மேலே இலக்கம் 1 தொடக்கம் 12 வரையுள்ள கொடுக்கல் வாங்கல்களை (பெறுமதிகளுடன்) எழுதுக. (2022 மார்ச் மாதத்தில் இருப்பு நன்கொடைகள், இருப்பு நட்டம் அல்லது இருப்புப் பதிவழிப்பு எதுவும் ஏற்படவில்லை எனக் கருதுக).

(2) தேறிய சொத்துக்கள் அடிப்படையைப் பயன்படுத்தி 2022 மார்ச் மாதத்திற்கான இலாபம் அல்லது நட்டம்

(3) 2022 மார்ச் மாதத்துக்கு இனங்காணப்பட வேண்டிய விற்பனை வருவாய் மற்றும் மொத்த வருமானம்

**(30 புள்ளிகள்)**

(ஆ) எழுமின் சங்கமானது கிராமப் பகுதிகளில் கல்வி நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்கான நலன்புரிச் சங்கமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச் சங்கத்தின் அங்கத்தவர் ஒருவருக்கான மாதாந்தச் சந்தா ரூ. 2 000 ஆகும். பின்வரும் தகவல்கள் 31.12.2022 இல் முடிவடையும் வருடத்துக்கான சங்கத்தின் சந்தாவுடன் தொடர்புடையனவாகும்.

(i) 01.01.2022 இலுள்ளவாறான சங்கத்தின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 240 ஆக இருந்ததுடன் அவர்களின் சந்தாக் கொடுப்பனவானது பின்வருமாறு இருந்தது.

- 01.01.2022 இலுள்ளவாறு 35 அங்கத்தவர்களின் சந்தாவானது 03 மாதங்களுக்கு நிலுவையாக இருந்தது. இவர்களுள் 25 அங்கத்தவர்கள் இச் சந்தா நிலுவைகளையும், 2022 ஆம் ஆண்டுக்கான முழு சந்தா தொகையினையும் நடைமுறை வருடத்தினுள் செலுத்தியுள்ளனர். மீதியாகவுள்ள 10 அங்கத்தவர்கள் 2021 ஆம் வருடத்தின் நிலுவையாகவுள்ள சந்தாக்களையும் 2022 ஆம் வருடத்துக்கான முழுச் சந்தாவையும் செலுத்தவில்லை. அத்துடன் மேலும் 30 அங்கத்தவர்கள் 2022 ஆம் வருடத்துக்கான சந்தா முழுவதையும் செலுத்தவில்லை.
- 2021 டிசம்பர் மாதத்தில் 50 அங்கத்தவர்கள் 2022 ஆம் வருடத்துக்கான முழுச் சந்தாவையும் செலுத்தியிருந்தனர். மேலும் 2022 டிசம்பர் மாதத்தில் 30 அங்கத்தவர்கள் 2023 ஆம் வருடத்தின் முதல் 03 மாதங்களுக்கான சந்தாக்களைச் செலுத்தியிருந்தனர்.
- ஏனைய அங்கத்தவர்கள் நடைமுறை வருடத்துக்கான சந்தாவை முறையாகச் செலுத்தியிருந்தனர்.

(ii) 01.07.2022 இல் 60 புதிய அங்கத்தவர்கள் இணைந்துள்ளனர். இவர்களுள் 40 அங்கத்தவர்கள் 06 மாதங்களுக்கான சந்தாவை முற்றாகச் செலுத்தினர். மீதி 20 அங்கத்தவர்கள் 31.12.2022 ஆகும்போது 05 மாதங்களுக்கு மட்டும் சந்தாவைச் செலுத்தியிருந்தனர்.

**வேண்டப்படுவது:**

31.12.2022 இல் முடிவடைந்த வருடத்துக்கான சந்தாக் கணக்கு

(10 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா இல. 3

(அ) (1)

| கொடுக்கல் வாங்கல் இல. | கொடுக்கல் வாங்கல் | |
|---|---|---|
| 1 | ரூ. 100 000 கிரயமான அலுவலக உபகரணங்கள் காசுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. | 01 |
| 2 | ரூ. 160 000 பெறுமதியான பொருட்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது | 01 |
| 3 | ரூ. 350 000 கிரயமான பொருட்கள் ரூ. 500 000 இற்கு காசுக்கு விற்கப்பட்டதுடன், ரூ. 150 000 இலாபம் பதிவுசெய்யப்பட்டது. | 02 |
| 4 | ரூ. 300 000 கிரயமான பொருட்கள் ரூ. 400 000 இற்கு கடனுக்கு விற்கப்பட்டதுடன், ரூ. 100 000 இலாபம் பதிவு செய்யப்பட்டது. | 02 |
| 5 | ரூ. 150 000 வங்கிக்கடன் தவணைப்பணமாக செலுத்தப்பட்டது. இது ரூ. 130 000 கடன்தொகையையும் ரூ. 20 000 வட்டியையும் உள்ளடக்கியுள்ளது. | 02 |
| 6 | வியாபாரக் கடன்கொடுத்தோருக்கு ரூ. 10 000 கழிவு பெற்றதன் பின் ரூ. 140 000 செலுத்தப்பட்டது. | 02 |
| 7 | வியாபாரக் கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து ரூ. 10 000 கழிவு கொடுத்ததன் பின்னர் ரூ. 50 000 காசு பெறப்பட்டது. | 02 |
| 8 | ரூ. 200 000 பொருட்கள் ரூ. 60 000 காசாக செலுத்தப்பட்டும் மீதி ரூ. 140 000 கடனிற்கும் கொள்வனவு செய்யப்பட்டது. | 02 |
| 9 | ரூ. 170 000 கிரயமான பொருட்கள் ரூ. 190 000 இற்கு விற்கப்பட்டது. இதனுள் ரூ. 160 000 கடனும் மீதி காசும் ஆகும். அத்துடன் ரூ. 20 000 இலாபம் பதிவு செய்யப்பட்டது. | 02 |
| 10 | ரூ. 200 000 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் உரிமையாளரால் வியாபாரத்தில் முதலீடு செய்யப்பட்டது. | 02 |
| 11 | ரூ. 60 000 கிரயமான சரக்குகள் உரிமையாளரால் தனிப்பட்ட பாவனைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. | 02 |
| 12 | ரூ. 100 000 கொண்டுசெல் பெறுமதியான அலுவலக உபகரணங்கள் ரூ. 150 000 இற்கு விற்கப்பட்டது. அத்துடன் ரூ. 50 000 ஆதாயம் பதிவு செய்யப்பட்டது. | 02 |

**(22 புள்ளிகள்)**

| | | | |
|---|---|---|---|
| (2) | இறுதி உரிமையாண்மை | 1 800 | (01) |
| | ஆரம்ப உரிமையாண்மை | (1 360) | (01) |
| | மேலதிக மூலதனம் | (200) | (01) |
| | பற்று | 60 | (01) |
| | **மாதத்திற்கான தேறிய இலாபம்** | **300** | |

**(04 புள்ளிகள்)**

(3) விற்பனை வருவாய் 1 090 (02) (500 + 400 + 190)

மொத்த வருமானம் 1 150 (02) (1 090 + 10 + 50)

**(04 புள்ளிகள்)**

**(30 புள்ளிகள்)**

(ஆ) சந்தா க/கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வருமதி சந்தா கொ.வ. | 210 (01) | | நிலுவை சந்தா கொ.வ. | 1 200 | (01) |
| வருமான செலவு க/கு | 6 480 (02) | | காசு | 4 610 | (02) |
| நிலுவை சந்தா கீ.கொ.செ. | 180 (01) | | வருமதி சந்தா கீ.கொ.செ. | 1 060 | (03) |
| | **6 870** | | | **6 870** | |

**(10 புள்ளிகள்)**

**செய்கைகள்**

| | அங்கத்தவர்களின் எண்ணிக்கை | அங்கத்தவர் ஒருவருக்கான சந்தா | மாதங்களின் எண்ணிக்கை | தொகை | |
|---|---|---|---|---|---|
| 01.01.2022 இல் பெறவேண்டிய சந்தா | 35 | 2 | 3 | 210 | 01 |
| 31.12.2022 இல் பெறவேண்டிய சந்தா | | | | | |
| தற்போதுள்ள அங்கத்தவர்கள் | 40 | 2 | 12 | 960 | 01 |
| புதிய அங்கத்தவர்கள் | 20 | 2 | 1 | 40 | 01 |
| 01.01.2022 இல் தற்போதுள்ள அங்கத்தவர்களிடமிருந்து வர வேண்டியது | 10 | 2 | 3 | 60 | 01 |
| | | | | **1 060** | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01.01.2022 இல் முற்பணமாகப் பெறப்பட்ட சந்தா | 50 | 2 | 12 | 1 200 | 01 |
| 31.12.2022 இல் முற்பணமாகப் பெறப்பட்ட சந்தா | 30 | 2 | 3 | 180 | 01 |

| | | | | |
|---|---|---|---|---|
| நடப்பு வருடத்தில் பெறப்பட்ட காசு: | | | | |
| தற்போதுள்ள அங்கத்தவர்களிடமிருந்து பெறவேண்டிய சந்தா | 25 | 2 | 3 | 150 * |
| புதிய அங்கத்தவர்கள் - 6 மாதங்கள் முழுவதற்கும் | 40 | 2 | 6 | 480 * |
| புதிய அங்கத்தவர்கள் - 05 மாதங்கள் | 20 | 2 | 5 | 200 * |
| தற்போதுள்ள அங்கத்தவர்கள் | 150 | 2 | 12 | 3 600 * |
| 2023 இற்காக தற்போதுள்ள அங்கத்தவர்கள் | 30 | 2 | 3 | 180 * |
| | | | | **4 610** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நடப்பு வருடத்திற்கான சந்தா: | | | | | |
| தற்போதுள்ள அங்கத்தவர்கள் | 240 | 2 | 12 | 5 760 | 01 |
| புதிய அங்கத்தவர்கள் | 60 | 2 | 6 | 720 | 01 |
| | | | | 6 480 | |

[* இரண்டு உருப்படிகளுக்கு **01** புள்ளி வீதம் ஆகக்கூடியது **02** புள்ளிகள்]

## வினா இல. 3

| பகுதி | 1 | 2 | 3 | மொத்தம் |
|---|---|---|---|---|
| (அ) | 22 | 4 | 4 | 30 |
| (ஆ) | 10 | --- | --- | 10 |
| | | | | **40** |

4\. (அ) மாலினி வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியானது விநியோகத்தர்களிடமிருந்து பாலுணவுகளைக் கொள்வனவு செய்து சில்லறைக் கடைகளுக்கு விற்பனை செய்கின்றது. பாலுணவு விநியோகத்தர்களும், மாலினி வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியும் பெறுமதிசேர் வரி (VAT) க்காகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பின்வரும் தகவல்கள் 2022 மார்ச் மாதத்துக்கான மாலினி வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியுடன் தொடர்புடையவையாகும் :

(i) 01.03.2022 இல் உள்ளவாறான மீதிகள் :

| | ரூ.'000 |
|---|---|
| கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 550 |
| கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 640 |
| காசுக் கணக்கு | 150 |
| VAT கட்டுப்பாட்டுக் கணக்கு (செலுத்த வேண்டியது) | 30 |

(ii) 01.03.2022 இல் உள்ளவாறு கடன் கொடுத்தோருக்குச் செலுத்த வேண்டிய தொகையும், செலுத்த வேண்டிய VAT உம் 10.03.2022 இல் முறையே 160 மற்றும் 161 இலக்கங்களைக் கொண்ட காசோலைகள் மூலம் தீர்க்கப்பட்டன. மேலும் 01.03.2022 இல் உள்ளவாறு கடன்பட்டோரிடமிருந்து பெறவேண்டிய தொகை 08.03.2022 இல் பெறப்பட்டது. இத்தொகை அத்தினத்தில் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது.

(iii) 05.03.2022 இல் கம்பனியானது விநியோகத்தர்களிடமிருந்து ரூ. 1 120 000 (ரூ. 120 000 VAT உள்ளடங்கலாக) பாலுணவுகளைக் கடனுக்குக் கொள்வனவு செய்தது. 25.03.2022 இல் கம்பனியானது 162 ஆம் இலக்கமுள்ள காசோலை மூலம் ஒரு விநியோகத்தருக்கு ரூ. 560 000 செலுத்தியது.

(iv) 2022 மார்ச் மாதத்துக்கான கடன்விற்பனை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு:

| சில்லறைக் கடை | விற்பனைத் திகதி | விற்பனைகள் (ரூ.'000) | விற்பனையில் உள்ளடக்கப் பட்டுள்ள VAT(ரூ.'000) | காசுப் பெறுவனவுத் திகதி | காசுப் பெறுவனவு (ரூ.'000) | அனுமதித்த கழிவு (ரூ.'000) | காசோலை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| லக்சனா | 12 | 672 | 72 | 20 | 612 | 60 | 156 |
| சாதனா | 15 | 336 | 36 | 30 | 336 | — | 480 |
| நிர்மலா | 28 | 1 108 | 108 | — | — | — | — |
| **மொத்தம்** | | **2 116** | **216** | | **948** | **60** | |

(v) 22.03.2022 இல் கம்பனியானது பாலுணவுகளை ரூ. 84 000 (ரூ. 9 000 VAT உள்ளடங்கலாக) காசுக்கு விற்பனை செய்தது. இத்தொகையானது அத்தினத்திலேயே வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது.

(vi) 2022 மார்ச் மாதத்துக்கான செயற்பாட்டுச் செலவுகள் ரூ. 200 000 ஆகும். இது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீது செய்யப்பட்ட பெறுமானத் தேய்வான ரூ. 40 000 ஐயும் உள்ளடக்கியுள்ளது. மீதமாகவுள்ள செயற்பாட்டுச் செலவுகள் 163 ஆம் இலக்கக் காசோலை மூலம் 30.03.2022 இல் செலுத்தப்பட்டது (செயற்பாட்டுச் செலவுகளுக்கான VAT ஐப் புறக்கணிக்கவும்).

(vii) 2022 மார்ச் மாதத்துக்கான வங்கிக் கூற்றானது 05.04.2022 இல் பெறப்பட்டது. 31.03.2022 இல் உள்ளவாறான வங்கிக் கூற்று மீதியானது அத்திகதியிலுள்ள காசுக் கணக்கு மீதியுடன் இணங்கவில்லை. வங்கிக்கூற்றின் சுருக்கிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
|---|---|---|
| 01.03.2022 இல் உள்ள மீதி | | 150 |
| காசு வைப்பு | | 640 |
| காசோலை இல. 156 | | 612 |
| காசு வைப்பு | | 84 |
| காசோலை இல. 160 | 550 | |
| காசோலை இல. 161 | 30 | |
| காசோலை இல. 162 | 560 | |
| நிலையியற் கட்டளைக் கொடுப்பனவு - கடன்வட்டி | 20 | |
| நிலையான வைப்பு மீதான வட்டி | | 100 |
| வங்கிக் கட்டணங்கள் | 5 | |
| 31.03.2022 இல் உள்ளவாறான மீதி | | 421 |

(viii) மாதாந்த அடிப்படையில் மூலப் பதிவேடுகளின் மொத்தமானது பொதுப் பேரேட்டுக் கணக்குகளுக்கு மாற்றப்படுகின்றன. கம்பனியால் வங்கிக்கூற்று பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர், நிலையியற் கட்டளைக் கொடுப்பனவு, நிலையான வைப்பு மீதான வட்டி மற்றும் வங்கிக் கட்டணங்கள் ஆகியன காசுக் கணக்கில் பதிவு செய்யப்படுகின்றன.

**வேண்டப்படுவது:**

(1) 2022 மார்ச் மாதத்துக்கான பின்வரும் மூலப்பதிவேடுகள்:

(i) காசுப் பொறுவனவு நாளேடு

(ii) காசுக் கொடுப்பனவு நாளேடு

(2) 2022 மார்ச் மாதத்துக்கான பின்வரும் பேரேட்டுக் கணக்குகள்:

(i) காசுக் கணக்கு

(ii) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு

(iii) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு

(iv) VAT கட்டுப்பாட்டுக் கணக்கு

(3) வங்கி இணக்கக்கூற்று (திருத்திய காசு மீதியுடன் ஆரம்பிக்கவும்)

(30 புள்ளிகள்)

(ஆ) அமலன் PLC ஆனது உள்ளூர் சந்தைக்கு மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்கின்றது. உற்பத்திச் செய்முறையின் வினைத்திறனை முன்னேற்றுவதற்காகக் கம்பனி, பழைய இயந்திரத்தைப் புதிய இயந்திரமொன்றினால் பிரதியீடு செய்வதற்கான செயற்றிட்டமொன்றைக் கருத்திற்கொள்கின்றது.

புதிய இயந்திரத்தின் மதிப்பிடப்பட்ட விலை ரூ. 2 800 000 ஆகும். இதன் எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலமும் மதிப்பிடப்பட்ட எஞ்சிய பெறுமதியும் முறையே 5 வருடங்கள் மற்றும் ரூ. 450 000 ஆகும். மேலும் புதிய இயந்திரத்தைக் கொண்டு வருவதற்கும் நிர்மாணிப்பதற்கும் ரூ. 200 000 ஏற்படும். புதிய இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டால் பழைய இயந்திரத்தை ரூ. 800 000 இற்கு விற்க முடியும்.

செயற்றிட்டத்தின் ஏனைய காசுப்பாய்ச்சல் மதிப்பீடுகள் பின்வருமாறு:

(i) செயற்றிட்டத்தின் ஆரம்பத்தில் மேலதிக தொழிற்படு மூலதனத் தேவைப்பாடு ரூ. 300 000 ஆகும். இது செயற்றிட்டத்தின் இறுதியில் மீளப் பெறப்பட முடியும்.

(ii) செயற்பாட்டுச் செலவுகள் வருடந்தோறும் ரூ. 200 000 ஆல் குறைவடையும்.

(iii) விற்பனை வருவாய் வருடந்தோறும் ரூ. 400 000 ஆல் அதிகரிக்கும்.

இச்செயற்றிட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட வருவாய் வீதம் 10% ஆகும். இதன் கழிவீட்டுக் காரணிகள் பின்வருமாறு இருந்தன.

| வருடம் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| கழிவீட்டுக் காரணி (இரு தசமதானத்துக்குக் கிட்டியது) | 0.91 | 0.83 | 0.75 | 0.68 | 0.62 |

**வேண்டப்படுவது:**

(1) செயற்றிட்டத்தின் ஒவ்வொரு வருடத்துக்குமான காசு உட்பாய்ச்சல்கள் மற்றும் காசு வெளிப்பாய்ச்சல்களின் அட்டவணை.

(2) செயற்றிட்டத்தின் தேறிய நிகழ்காலப் பெறுமதி (NPV)

(3) தேறிய நிகழ்காலப் பெறுமதியின் அடிப்படையில் புதிய இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கான சிபாரிசு.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

**வினா இல. 4**

(அ) (1)

(i) **காசுப் பெறுவனவு நாளேடு** (ரூ.'000)

| திகதி | விபரம் | கழிவு | தொகை | பகுப்பாய்வு | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | விற்பனை | VAT | வியாபார கடன்பட்டோர் |
| 08.03.2022 | கடன்பட்டோர் | | 640 * | | | 640 * |
| 20.03.2022 | லக்சனா | 60 * | 612 * | | | 612 * |
| 22.03.2022 | விற்பனைகள் | | 84 * | 75 * | 9 * | |
| 30.03.2022 | சாதனா | | 336 * | | | 336 * |
| | **மொத்தம்** | 60 | 1 672 * | 75 * | 9 * | 1 588 * |

[* மொத்தங்கள் மற்றும் நிரல் உட்பட ஏதேனும் இரண்டு விடயங்களுக்கு **01** புள்ளி –ஆகக்கூடியது **06** புள்ளிகள்]

(ii) **காசுக் கொடுப்பனவு நாளேடு** (ரூ.'000)

| திகதி | விபரம் | கழிவு | தொகை | பகுப்பாய்வு | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவு | செலவுகள் | ஏனையவை |
| 10.03.2022 | கடன் கொடுத்தோர் | | 550 * | 550 * | | |
| 10.03.2022 | VAT கொடுப்பனவு | | 30 * | | | 30 * |
| 25.03.2022 | கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவு | | 560 * | 560 * | | |
| 30.03.2022 | செயற்பாட்டுச் செலவுகள் | | 160 * | | 160 * | |
| | மொத்தம் | | 1 300 * | 1 110 * | 160 * | 30 * |

[* மொத்தங்கள் மற்றும் தொகை நிரல் உட்பட ஏதேனும் இரண்டு விடயங்களுக்கு 01 புள்ளி – 06 புள்ளிகள்]

(12 புள்ளிகள்)

(2)

(i) காசுக் க/கு (ரூ.'000)

| | | | |
|---|---|---|---|
| மீ.கீ.கொ.வ. | 150 | வியாபார கடன்கொடுத்தோர் | 1 110 * |
| வியாபார கடன்பட்டோர் | 1 588 * | செலவுகள் | 160 * |
| காசு விற்பனைகள் | 75 * | VAT | 30 * |
| VAT | 9 * | மீ.கீ.கொ.செ. | 522 |
| | **1 822** | | **1 822** |
| மீ.கீ.கொ.வ. | 522 | கடன் வட்டி | 20 * |
| நிலையான வைப்பு வட்டி | 100 * | வங்கிக் கட்டணங்கள் | 5 * |
| | | திருத்திய மீ.செ. | 597 |
| | **622** | | **622** |

[* ஏதேனும் இரண்டு விடயங்களுக்கு **01** புள்ளி – ஆகக்கூடியது **04** புள்ளிகள் – மொத்தங்களைப் புறக்கணிக்க]

**(ii) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் க/கு (ரூ.'000)**

| | | | |
|---|---|---|---|
| மீ.கீ.கொ.வ. | 640 * | காசு | 1 588 * |
| விற்பனைகள் | 1 900 * | கொடுத்த கழிவு | 60 * |
| VAT | 216 * | மீ.கீ.கொ.செ. | 1 108 * |
| | 2 756 | | 2 756 |

[* ஏதேனும் இரண்டு விடயங்களுக்கு **01** புள்ளி – **03** புள்ளிகள்]

**(iii) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் க/கு (ரூ.'000)**

| | | | |
|---|---|---|---|
| காசு | 1 110 * | மீ.கீ.கொ.வ. | 550 * |
| மீ.கீ.கொ.செ. | 560 * | கொள்வனவுகள் | 1 000 * |
| | | VAT | 120 * |
| | 1 670 | | 1 670 |

[* ஏதேனும் இரண்டு விடயங்களுக்கு **01** புள்ளி – ஆகக்கூடியது **02** புள்ளிகள்]

**(iv) VAT கட்டுப்பாட்டுக் க/கு (ரூ.'000)**

| | | | |
|---|---|---|---|
| வியாபார கடன்கொடுத்தோர் | 120 * | மீ.கீ.கொ.வ. | 30 * |
| காசு | 30 * | வியாபார கடன்பட்டோர் | 216 * |
| மீ.கீ.கொ.செ. | 105 * | விற்பனை | 9 * |
| | 255 | | 255 |

[* ஏதேனும் இரண்டு விடயங்களுக்கு **01** புள்ளி – **03** புள்ளிகள்]

**(12 புள்ளிகள்)**

(3) **31.03.2022 இல் முடிவடைந்த மாதத்திற்கான வங்கி இணக்கக்கூற்று (ரூ.'000)**

| | | | |
|---|---|---|---|
| 01.03.2022 இல் திருத்திய காசு மீதி | (01) | 597 | |
| வழங்கப்பட்டதில் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | | 160 | (02) |
| வைப்பிலிடப்பட்டதில் தேறாத வைப்புக்கள் | | (336) | (02) |
| 31.03.2022 இல் உள்ளவாறான வங்கிக்கூற்று மீதி | (01) | 421 | |

**(06 புள்ளிகள்)**

**(30 புள்ளிகள்)**

(ஆ) காசு உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சலுக்கான அட்டவணை (ரூ.'000)

| வருடம் | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | |
|---|---|---|---|---|---|---|---|
| **காசு உட்பாய்ச்சல்கள்** | | | | | | | |
| பழைய இயந்திர விற்பனை | 800 | (01) | | | | | |
| செயற்பாட்டுச் செலவுகள் மீதான குறைவு | | 200 | 200 | 200 | 200 | 200 | (01) |
| விற்பனை வருமான அதிகரிப்பு | | 400 | 400 | 400 | 400 | 400 | (01) |
| இழிவுப் பெறுமதி | | | | | | 450 | (01) |
| தொழிற்படு மூலதன மீள்பெறுகை | | | | | | 300 | (01) |
| **மொத்த காசு உட்பாய்ச்சல்கள்** | **800** | **600** | **600** | **600** | **600** | **1 350** | |
| **காசு வெளிப்பாய்ச்சல்கள்** | | | | | | | |
| புதிய இயந்திரத்தின் கிரயம் | (2 800) | (01) | | | | | |
| போக்குவரத்து மற்றும் பொருத்தல் கிரயம் | (200) | (01) | | | | | |
| மேலதிக தொழிற்படு மூலதனம் | (300) | (01) | | | | | |
| **மொத்த காசு வெளிப்பாய்ச்சல்கள்** | (3 300) | ---- | ---- | ---- | ---- | ---- | |
| | | | | | | | |
| **தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | (– 2 500) | **600** | **600** | **600** | **600** | **1 350** | |

**(08 புள்ளிகள்)**

(2)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கழிவுக் காரணி 10% | 1 | 0.91 | 0.83 | 0.75 | 0.68 | 0.62 |
| நிகழ்காலப் பெறுமதி (ரூ.'000) | (– 2 500) | 546 | 498 | 450 | 408 | 837 |
| தேறிய நிகழ் காலப் பெறுமதி (ரூ.'000) | (01) 239 | | | | | |

(01)

(3) தேறிய நிகழ்காலப் பெறுமதி நேர் கணியமாக இருப்பதால் திட்டம் ஏற்றுக் கொள்ளப்படலாம்

(10 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

வினா இல. 4

| பகுதி | 1 | 2 | 3 | மொத்தம் |
|---|---|---|---|---|
| (அ) | 12 | 12 | 06 | 30 |
| (ஆ) | 08 | 01 | 01 | 10 |
| | | | | **40** |

5. (அ) பின்வரும் மீதிகளானவை அனு, பானு, ஜானு ஆகியோரின் பங்குடைமையின் 01.04.2021 இலுள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

| பங்காளர்கள் | மூலதனக் கணக்குகள் (ரூ.'000) | நடைமுறைக் கணக்குகள் (ரூ.'000) | கடன் கணக்குகள் (ரூ.'000) |
|---|---|---|---|
| அனு | 10 000 | 2 000 | 4 000 |
| பானு | 8 000 | 1 000 | — |
| ஜானு | 6 000 | 600 | — |

மேலதிக தகவல்கள்:

(i) பங்குடைமை உடன்படிக்கையின் விதிகள் பின்வருமாறு:

- அனு, பானு, ஜானு ஆகியோருக்கிடையிலான இலாபம் அல்லது நட்டப் பகிர்வு விகிதம் முறையே 3:2:1 ஆகும்.
- ஒவ்வொரு பங்காளரும் ரூ. 1 200 000 வருடாந்தச் சம்பளத்துக்கு உரித்துடையவர்.
- ஒவ்வொரு பங்காளரும் வருட ஆரம்பத்திலுள்ள மூலதன மீதிகளுக்கு 10% வருடாந்த வட்டிக்கு உரித்துடையவர்.
- பங்காளர் ஒருவரால் வழங்கப்படும் கடன்களுக்கு பங்காளர் 6% வருடாந்த வட்டிக்கு உரித்துடையவர் ஆவார். மேலும் இது பங்காளர்களின் நடைமுறைக் கணக்குகளினூடாகச் சீராக்கப்படும்.

(ii) 31.03.2022 இல் முடிவடையும் வருடத்துக்கான பங்குடமையின் விற்பனை வருவாய் மற்றும் விற்பனைக் கிரயம் முறையே ரூ. 30 000 000 மற்றும் ரூ. 19 000 000 ஆக இருந்தன.

(iii) 31.03.2022 இல் முடிவடையும் வருடத்துக்கான பங்குடமையின் செயற்பாட்டுச் செலவுகள் ரூ. 5 000 000 ஆகும்.

(iv) பானுவால் பங்குடமையிலிருந்து அவரின் சொந்தத் தேவைக்காக நடைமுறை வருடத்தில் எடுக்கப்பட்ட பொருட்களின் கிரயமானது ரூ. 400 000 ஆக இருந்ததுடன் இது புத்தகங்களில் பதியப்பட்டிருக்கவில்லை. எனினும், 31.03.2022 இலுள்ளவாறான இருப்பானது விற்பனைக் கிரயக் கணிப்பீட்டுக்காகப் பௌதீகக் கணக்கெடுப்பு அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது.

(v) நடைமுறை வருடத்தில் பங்காளர் ஒவ்வொருவருக்கும் ரூ. 1 000 000 சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் இக் கொடுப்பனவுகள் தவறுதலாகப் பங்குடமையின் செயற்பாட்டுச் செலவுகளுள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(vi) ஜானுவிற்குச் சொந்தமான காணியானது 01.03.2022 இல் பங்குடைமைக்கு மாதாந்த வாடகை ரூ. 115 000 இற்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாடகையானது செலுத்தப்பட்டிருக்கவோ அன்றேல் பதியப்பட்டிருக்கவோ இல்லை.

(vii) அனு கடன்மீதியின் 75% ஆனது 31.12.2021 இல் அத்திகதி வரையான வட்டியுடன் தீர்க்கப்பட்டுள்ளது.

(viii) 31.03.2022 இல் ஜானு பங்குடமையிலிருந்து இளைப்பாறினார். அத் திகதியில் பங்குடமையின் நன்மதிப்பு ரூ. 6 000 000 ஆக மதிப்பிடப்பட்டது. இது பங்குடமையின் புத்தகங்களில் சீராக்கப்பட வேண்டியுள்ளது. அனுவும், பானுவும் இலாபம் அல்லது நட்டத்தை முறையே 3 : 2 என்றவாறு பகிர்ந்து கொண்டு பங்குடமையைத் தொடர்ந்து நடாத்த உடன்பட்டனர்.

(ix) 31.03.2022 இல் ரூ. 1 200 000 கொண்டு செல் தொகையினைக் கொண்ட மோட்டார் வாகனமொன்று ஏனைய பங்காளரின் சம்மதத்துடன் ஜானுவுக்குக் கொடுக்கப்பட்டது. ஜானுவுக்குச் செலுத்த வேண்டிய மீதித் தொகையானது கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டது.

(x) ஜானுவின் இளைப்பாறலுடன் தொடர்புடைய அனைத்துச் சீராக்கங்களும் மூலதனக் கணக்குகளுடாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

வேண்டப்படுவது:

(1) 31.03.2022 இல் முடிவடையும் வருடத்துக்கான பங்குடமையின் வருமானக்கூற்று (பங்காளருக்கான பகிர்வுகள் உட்பட).

(2) 31.03.2022 இல் முடிவடையும் வருடத்துக்கான பங்காளர்களின் மூலதனக் கணக்குகள் மற்றும் நடைமுறைக் கணக்குகள்.

(22 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் தகவல்களானவை நந்தினி PLC இன் நிதிக்கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

| **31.03.2022 இல் முடிவடையும் வருடத்துக்கானது :** | **ரூ.'000** |
|---|---|
| விற்பனைகள் | 9 000 |
| மொத்த இலாபம் | 3 200 |
| செயற்பாட்டுச் செலவுகள் | 1 200 |
| வட்டிச் செலவுகள் | 200 |
| வருடத்துக்கான வருமான வரிச் செலவுகள் | 450 |
| சாதாரண பங்குதாரர்களுக்குச் செலுத்திய இடைக்காலப் பங்குலாபம் | 300 |

**31.03.2022 இலுள்ளவாறானது :**

| | |
|---|---|
| இருப்புக்கள் | 1 100 |
| வியாபாரக் கடன்பட்டோர் | 1 400 |
| கூறிப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் (பங்குகளின் எண்ணிக்கை - 150 000) | 3 000 |

**மேலதிக தகவல்கள் :**

(i) அனைத்து விற்பனைகளும் கடன் அடிப்படையில் செய்யப்படுகின்றன.

(ii) 01.04.2021 இல் இருப்புக்கள் ரூ. 900 000 ஆக இருந்தது.

(iii) 01.04.2021 இல் வியாபாரக் கடன்பட்டோர் ரூ. 1 600 000 ஆக இருந்தது.

(iv) 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்துக்கான தேர்ந்தெடுக்கப்பட்ட சில விகிதங்கள் வருமாறு:

— மொத்த இலாப விகிதம் 38%
— தேறிய இலாப விகிதம் 12.5%
— இருப்புப் புரள்வு விகிதம் 6 தடவைகள்
— கடன்பட்டோர் புரள்வு விகிதம் 5.5 தடவைகள்
— பங்கொன்றிற்கான உழைப்பு ரூ. 7.50
— பங்கொன்றிற்கான பங்குலாபம் ரூ. 2.50

**வேண்டப்படுவது:**

(1) 31.03.2022 இல் முடிவடையும் வருடத்துக்கான பின்வரும் விகிதங்கள்.

(i) மொத்த இலாப விகிதம்
(ii) தேறிய இலாப விகிதம்
(iii) இருப்புப் புரள்வு விகிதம்
(iv) கடன்பட்டோர் புரள்வு விகிதம்
(v) பங்கொன்றிற்கான உழைப்பு
(vi) பங்கொன்றிற்கான பங்குலாபம்

(2) மேற்படி (1) இல் கணிக்கப்பட்ட விகிதங்கள் ஒவ்வொன்றிலும் ஏற்பட்ட மாற்றமானது முன்னைய வருட விகிதங்களுடன் ஒப்பிடும்பொழுது சாதகமாகவா அல்லது பாதகமாகவா உள்ளது எனக் குறிப்பிடுக.

(18 புள்ளிகள்)
(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா இல. 05

(அ)

(1) அனு, பானு, ஜானு பங்குடமையின்
31.03.2022 இல் முடிவடையும் வருடத்துக்கான வருமானக்கூற்று

(ரூ.'000)

| | | | | |
|---|---|---|---|---|
| விற்பனைகள் | | 30 000 | | |
| விற்பனைக்கிரயம் | | (18 600) | (01) | |
| மொத்த இலாபம் | | 11 400 | | |
| செயற்பாட்டுச் செலவுகள் | | (2 115) | (02) | 5000 – 3000 + 115 |
| கடன்வட்டி | | (195) | (02) | 180 + 15 |
| **தேறிய இலாபம்** | | **9 090** | | |
| **மூலதன வட்டி** அனு | 1 000 | | | |
| பானு | 800 (02) | | | |
| ஜானு | 600 | (2 400) | | |
| **சம்பளங்கள்** அனு | 1 200 | | | |
| பானு | 1 200 (01) | | | |
| ஜானு | 1 200 | (3 600) | | |
| **இலாபப்பங்கு** அனு | 1 545 | | | |
| பானு (02) | 1 030 | | | |
| ஜானு | 515 | (3 090) | **(10 புள்ளிகள்)** | |

(2) **மூலதன கணக்குகள்** (ரூ.'000)

| | அனு | பானு | ஜானு | | | அனு | பானு | ஜானு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நன்மதிப்பு | 3 600 | 2 400 | (01) | | மீ.கீ.கொ.வ. | 10 000 | 8 000 | 6 000 | |
| மோட்டார் வாகனங்கள் | | | 1 200 | (01) | நன்மதிப்பு | 3 000 | 2 000 | 1 000 | (01) |
| கடன் | | | 7 830 | (01) | நடைமுறைக் கணக்கிலிருந்து மாற்றியது | | | 2 030 | |
| மீ.கீ.கொ.செ. | 9 400 | 7 600 | | | | | | | |
| | 13 000 | 10 000 | 9 030 | | | 13 000 | 10 000 | 9 030 | |

(2) **நடைமுறைக் கணக்குகள்** (ரூ.'000)

| | அனு | பானு | ஜானு | | | | அனு | பானு | ஜானு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| செலுத்திய சம்பளங்கள் | 1 000 | 1 000 | 1000 | (01) | மீ.கீ.கொ.வ. | | 2 000 | 1 000 | 600 | |
| சரக்கு பற்றுக்கள் | | 400 | (01) | | மூலதன வட்டி | (01) | 1 000 | 800 | 600 | |
| கடன் வட்டி | 180 | | | | சம்பளங்கள் | (01) | 1 200 | 1 200 | 1 200 | |
| மூலதன கணக்கிற்கு மாற்றியது | | (01) | 2 030 | | இலாபப்பங்கு | (01) | 1 545 | 1 030 | 515 | |
| | | | | | கடன் வட்டி | (01) | 195 | | | |
| | | | | | வாடகை | | | | 115 | (01) |
| மீ.கீ.கொ.செ. | 4 760 | 2 630 | | | | | | | | |
| | 5 940 | 4 030 | 3 030 | | | | 5 940 | 4 030 | 3 030 | |

**(12 புள்ளிகள்)**

**(ஆ) (1)**

(i)

மொத்த இலாப விகிதம் **35.55% / 36** (02)

செய்கை 1

$$\frac{\text{மொத்த இலாபம்}}{\text{விற்பனைகள்}} \times 100 = \frac{3\,200 \ \boxed{01}}{9\,000 \ \boxed{01}} \times 100$$

(ii)

தேறிய இலாப விகிதம் **15%** (02)

செய்கை 2

$$\frac{\text{தேறிய இலாபம்}}{\text{விற்பனைகள்}} \times 100 = \frac{1\,350 \ \boxed{01}}{9\,000 \ \boxed{01}} \times 100$$

(iii)

**இருப்பு புரள்வு விகிதம் (தடவைகள்)** **5.8** (02)

**செய்கை 3**

$$\frac{\text{விற்பனைக்கிரயம்}}{\text{சராசரி இருப்பு}} \times 100 = \frac{5\,800 \ \boxed{01}}{1\,000 \ \boxed{01}} \times 100$$

(iv)

**கடன்பட்டோர் புரள்வு விகிதம் (தடவைகள்)** **6** (02)

**செய்கை 4**

$$\frac{\text{விற்பனைகள்}}{\text{சராசரி வியாபார கடன்பட்டோர்}} = \frac{9\,000 \ \boxed{01}}{1\,500 \ \boxed{01}}$$

(v)

**பங்கொன்றிற்கான உழைப்பு (ரூ.)** 9 (02)

**செய்கை 5**

| | | |
|---|---|---|
| ஆண்டுக்கான இலாபம் | 1 350 | 01 |
| சாதாரண பங்குகளின் எண்ணிக்கை | 150 | 01 |

(vi)

**பங்கொன்றிற்கான பங்குலாபம் (ரூ.)** 2 (02)

**செய்கை 6**

| | | |
|---|---|---|
| பங்குலாபம் - சாதாரண பங்குதாரர் | 300 | 01 |
| சாதாரண பங்குகளின் எண்ணிக்கை | 150 | 01 |

**(12 புள்ளிகள்)**

(2)

| விகிதம் | 2022 | 2021 | மாற்றம் |
|---|---|---|---|
| மொத்த இலாப விகிதம் | 35.6% | 38.0% | பாதகமானது (01) |
| தேறிய இலாப விகிதம் | 15.0% | 12.5% | சாதகமானது (01) |
| இருப்பு புரள்வு விகிதம் (தடவைகள்) | 5.8 | 6 | பாதகமானது (01) |
| கடன்பட்டோர் புரள்வு விகிதம் (தடவைகள்) | 6 | 5.5 | சாதகமானது (01) |
| பங்கொன்றிற்கான உழைப்பு | 9 | 7.5 | சாதகமானது (01) |
| பங்கொன்றிற்கான பங்குலாபம் | 2 | 2.5 | பாதகமானது (01) |

(06 புள்ளிகள்)

வினா இல. 5

| பகுதி | 1 | 2 | மொத்தம் |
|---|---|---|---|
| (அ) | 10 | 12 | 22 |
| (ஆ) | 12 | 06 | 18 |
| | | | 40 |

6. (அ) பின்வரும் தகவல்களானது 31.03.2022 மற்றும் 31.03.2021 இலுள்ளவாறான லதீபா PLC இன் நிதிநிலைமைக் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

| | 31.03.2022 இல் உள்ளபடி (ரூ.'000) | 31.03.2021 இல் உள்ளபடி (ரூ.'000) |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்-கொண்டு செல் மீதி | 275 000 | 245 000 |
| காசும் காசுக்குச் சமமானவைகளும் | 8 050 | 1 500 |
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் | 285 000 | 200 000 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் - காணியும் கட்டடங்களும் | 13 500 | 8 000 |
| நீண்டகால வங்கிக்கடன் | 135 000 | 125 000 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 6 500 | 7 250 |

**மேலதிக தகவல்கள் :**

(i) 31.03.2022 இல் முடிவடைந்த வருடத்தில் வாடிக்கையாளரிடமிருந்து சேகரிக்கப்பட்ட காசு ரூ. 245 000 000 ஆகவும் விநியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்குச் செலுத்திய காசு ரூ. 235 000 000 ஆகவும் இருந்தன.

(ii) 31.03.2022 இல் முடிவடையும் வருடத்துக்கான பெறுமானத்தேய்வு, வருமான வரிச்செலவு ஆகியன முறையே ரூ. 35 000 000, ரூ. 15 000 000 ஆகவும் இருந்தன.

(iii) 31.03.2022 இல் முடிவடைந்த வருடத்தில் கம்பனியானது வங்கிக்கடன் தவணைக் கட்டணம் ரூ. 35 000 000 செலுத்தியுள்ளது. இதில் ரூ. 8 500 000 வட்டி உள்ளடங்கியுள்ளது. மேலும் 31.03.2022 இல் புதிய கடன் ஒன்று பெறப்பட்டது.

(iv) மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் ஏற்பட்ட அதிகரிப்பானது காணி கட்டடங்களை 31.03.2022 இல் இரண்டாம் தடவையாக மீள்மதிப்பீடு செய்தபோது எழுந்த மிகையினைப் பிரதிபலிக்கின்றது.

(v) 31.03.2022 இல் இயந்திரமொன்றை விற்றதன் காரணமாக ரூ. 2 500 000 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. இவ்வியந்திரமானது 01.04.2020 இல் ரூ. 20 000 000 இல் கொள்வனவு செய்யப்பட்டும், நேர்கோட்டு முறையில் வருடாந்தம் 10% பெறுமானத் தேய்விடப்பட்டும் இருந்தது.

(vi) 31.03.2022 இல் கம்பனியானது மோட்டார் வாகனமொன்றைக் காசுக்குக் கொள்வனவு செய்தது.

(vii) கம்பனியானது 01.10.2021 இல் ரூ. 10 000 000 நிறுத்தி வைத்த வருவாய்களை மூலதனமாக்கியுள்ளது. மேலும் இக்கம்பனியானது 01.01.2022 இல் பொதுப் பங்கு வழங்கலொன்றைச் செய்ததுடன் வழங்கப்பட்ட அனைத்துப் பங்குகளுக்குமான காசை 2022 ஜனவரி மாதத்தில் சேகரித்துள்ளது.

(viii) 31.03.2022 இல் முடிவடைந்த வருடத்தில் சாதாரண பங்குதாரர்களுக்கு ரூ. 2 200 000 இடைக்காலப் பங்குலாபம் செலுத்தப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது :

'LKAS 7 - காசுப்பாய்ச்சல் கூற்று' இன்படி 31.03.2022 இல் முடிவடையும் வருடத்துக்கான லதீபா PLC இன் காசுப்பாய்ச்சல் கூற்று (20 புள்ளிகள்)

(ஆ) ஸ்ரீபன் என்பவர் வாடகை வான் ஒன்றைப் பயன்படுத்தி யாழ்ப்பாணத்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்குப் பயணிகள் போக்குவரத்துச் சேவையினை ஆரம்பிப்பதற்குத் திட்டமிடுகின்றார். யாழ்ப்பாணத்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கும் திரும்ப யாழ்ப்பாணத்துக்கும் செல்வதானது ஒரு பயணமாகக் கருதப்படும். பயணம் ஒன்றுக்கு ரூ. 100 000 அறவிட எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் போக்குவரத்துச் சேவைக்கான மதிப்பிடப்பட்ட கிரயங்கள் பின்வருமாறு இருந்தன :

| | | |
|---|---|---|
| வாகனத்துக்கான வாடகை | - வருடத்துக்கு | ரூ. 720 000 |
| வாகனப் பராமரிப்புக் கிரயம் | - வருடத்துக்கு | ரூ. 120 000 |
| நிர்வாகக் கிரயம் | - வருடத்துக்கு | ரூ. 240 000 |
| சாரதிக் கட்டணம் | - பயணமொன்றுக்கு | ரூ. 10 000 |
| வாகன உதவியாளர் கட்டணம் | - பயணமொன்றுக்கு | ரூ. 6 000 |
| சாரதிக்கும் உதவியாளருக்குமான சாப்பாட்டுக் கிரயம் | - பயணமொன்றுக்கு | ரூ. 8 000 |
| அதிவேக வீதி அனுமதிச்சீட்டுகளுக்கான கிரயம் | - பயணமொன்றுக்கு | ரூ. 2 000 |
| பயணமொன்றுக்கான எரிபொருட் கிரயம் (டீசலுக்கு) | - | ? |

மேலதிக தகவல்கள் :

(i) யாழ்ப்பாணத்துக்கும் கட்டுநாயக்க விமான நிலையத்துக்குமிடையிலான தூரம் 400 கிலோமீற்றர்களாகும்.

(ii) லீற்றர் ஒன்றிற்கான டீசலின் விலை ரூ. 550 ஆகும். இவ் வாகனமானது ஒரு லீற்றர் டீசலுக்கு 10 கிலோமீற்றர் ஓடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(iii) வாகனமானது வாடகைக்கு எடுக்கப்பட்டபோதிலும் வாகனப் பராமரிப்புக் கிரயமானது இவ் வணிகத்தினாலேயே செலுத்தப்பட வேண்டும்.

வேண்டப்படுவது :

(1) இப் போக்குவரத்துச் சேவையின் வருடாந்த நிலையான கிரயம்

(2) பயணம் ஒன்றுக்கான மாறும் கிரயம்

(3) மொத்தக் கிரயத்தை ஈடுசெய்வதற்கு வருடமொன்றில் மேற்கொள்ள வேண்டிய பயணங்களின் எண்ணிக்கை

(4) வருடமொன்றுக்கு 48 பயணங்கள் மேற்கொள்ளப்படுமாயின் வருடாந்த இலாபம்

(5) பின்வரும் இரண்டு நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்படுமாயின் மொத்தக் கிரயத்தை ஈடு செய்வதற்கு வருடமொன்றுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பயணங்களின் எண்ணிக்கை:

- பயணமொன்றுக்கான வாகன உதவியாளர் கட்டணத்தை ரூ. 1000 ஆல் குறைத்தல்.
- பயணமொன்றுக்கு அறவிடும் கட்டணத்தை ரூ. 5000 ஆல் அதிகரித்தல்.

(20 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா இல. 6

(அ) லதீபா PLC

31.03.2022 இல் முடிவடையும் வருடத்துக்கான காசுப்பாய்ச்சல்கூற்று

| | | | |
|---|---|---|---|
| வாடிக்கையாளரிடமிருந்து சேகரிக்கப்பட்டவைகள் | 245 000 | (01) | |
| வினியோகஸ்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் | (235 000) | (01) | |
| | 10 000 | | |
| செலுத்திய வட்டி | (8 500) | (01) | |
| செலுத்திய வரி | (15 750) | (01) | செய்கை 1 |
| செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் (01) | (14 250) | | |
| முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல் | | | |
| மோட்டார் வாகனங்கள் கொள்வனவு | (75 500) | (03) | செய்கை 2 |
| இயந்திர அகற்றலால் கிடைத்த தொகை | 13 500 | (02) | செய்கை 3 |
| முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (01) | (62 000) | | |
| நிதி நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள் | | | |
| இடைக்காலப் பங்குலாபம் செலுத்தியது | (2 200) | (02) | செய்கை 4 |
| பங்குகள் வழங்கல் | 75 000 | (01) | செய்கை 5 |
| கடன் தவணைக்கட்டணம் - மூலதனம் | (26 500) | (01) | |
| பெறப்பட்ட கடன் | 36 500 | (01) | செய்கை 6 |
| **நிதி நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** (01) | **82 800** | | |
| தேறிய காசு உட்பாய்ச்சல் (01) | 6 550 | | |
| 31.03.2021 இல் காசும் காசுக்குச் சமனானவையும் | 1 500 | (01) | |
| 31.03.2022 இல் காசும் காசுக்குச் சமனானவையும் (01) | 8 050 | | |

**(20 புள்ளிகள்)**

**செய்கைகள்:**

**செய்கை 1 செலுத்த வேண்டிய வருமானவரி**

| | | |
|---|---|---|
| 01.04.2021 இல் மீதி | 7 250 | |
| வரிச் செலவு | 15 000 | 01 |
| | 22 250 | |
| செலுத்திய வருமானவரி | (15 750) | |
| 31.03.2022 இல் மீதி | 6 500 | |

**செய்கை 2 ஆதனம் பொறி மற்றும் உபகரணம்**

| | | |
|---|---|---|
| 01.04.2021 இல் மீதி | 245 000 | |
| மீள்மதிப்பீட்டு மிகை | 5 500 | 01 |
| பெறுமானத் தேய்வு | (35 000) | 01 |
| இயந்திர அகற்றல் | (16 000) | 01 |
| | 199 500 | |
| மோட்டார் வாகன கொள்வனவு | 75 500 | |
| 31.03.2022 இல் மீதி | 275 000 | |

**செய்கை 3 இயந்திர அகற்றல்**

| | | |
|---|---|---|
| கிரயம் | 20 000 | |
| திரண்ட பெறுமானத் தேய்வு | (4 000) | 01 |
| கொண்டு செல் தொகை | 16 000 | |
| அகற்றல் நட்டம் | (2 500) | 01 |
| அகற்றலின் போதான பெறுவனவுகள் | 13 500 | |

**செய்கை 4 நிறுத்தி வைத்த வருவாய்கள்**

| | | |
|---|---|---|
| 01.04.2021 இல் மீதி | 65 200 | |
| ஒதுக்கங்களை மூலதனமாக்கல் | (10 000) | 01 |
| வருடத்திற்கான இலாபம் | 44 500 | 01 |
| | 99 700 | |
| இடைக்காலப் பங்குலாபம் | (2 200) | |
| 31.03.2022 இல் மீதி | 97 500 | |

**செய்கை 5 பங்கு மூலதனம்**

| | | |
|---|---|---|
| 01.04.2021 இல் மீதி | 200 000 | |
| ஒதுக்கங்களை மூலதனமாக்கல் | 10 000 | 01 |
| பங்கு வழங்கல் | 75 000 | |
| 31.03.2022 இல் மீதி | 285 000 | |

**செய்கை 6 நீண்டகாலக்கடன்**

| | | |
|---|---|---|
| 01.04.2021 இல் மீதி | 125 000 | |
| வட்டி | 8 500 | |
| தவணைக்கட்டணம் | (35 000) | 01 |
| | 98 500 | |
| பெறப்பட்ட கடன் | 36 500 | |
| 31.03.2022 இல் மீதி | 135 000 | |


Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!

(ஆ)

(1) **மொத்த வருடாந்த நிலையான கிரயம்** **1 080 000** (03)

**செய்கை 1**

| | | |
|---|---|---|
| வாடகை | 720 000 | 01 |
| பராமரிப்புக் கிரயம் | 120 000 | 01 |
| நிர்வாக செலவுகள் | 240 000 | 01 |

(2) **பயணம் ஒன்றுக்கான மாறும் கிரயம்** **70 000** (06)

**செய்கை 2**

| | | | |
|---|---|---|---|
| சாரதிக் கட்டணம் | | 10 000 | 01 |
| உதவியாளர் கட்டணம் | | 6 000 | 01 |
| சாப்பாட்டுக் கிரயம் | | 8 000 | 01 |
| எரிபொருள் (டீசல்) கிரயம் | 80 X 550 | 44 000 | 02 |
| அதிவேக வீதி அனுமதிச்சீட்டு | | 2 000 | 01 |

(3) **மொத்த வருடாந்த கிரயத்தை ஈடுசெய்வதற்கான பயணங்களின் எண்ணிக்கை** 36 (03)

**செய்கை 3**

$$\frac{\text{நிலையான கிரயம்}}{\text{பயணம் ஒன்றுக்கான பங்களிப்பு}} = \frac{1\,080\,000 \ [01]}{30\,000 \ [02]}$$

(4) **வருடாந்த இலாபம்** **360 000** (03)

**செய்கை 4**

| | | | |
|---|---|---|---|
| மொத்த வருமானம் (48 X 100 000) | | 4 800 000 | 01 |
| மொத்த மாறும் கிரயம் (48 X 70 000) | 01 | 3 360 000 | |
| மொத்த பங்களிப்பு | | 1 440 000 | |
| வருடாந்த நிலையான கிரயம் | 01 | 1 080 000 | |
| வருடத்துக்கான இலாபம் | | 360 000 | |

(5) வருடாந்த கிரயத்தை ஈடுசெய்வதற்கான பயணங்களின் எண்ணிக்கை 30 (05)

செய்கை 5

$$\frac{\text{நிலையான கிரயம்}}{\text{திருத்தப்பட்ட பங்களிப்பு}} = \frac{1\,080\,000 \ [01]}{36\,000 \ [04]}$$

(105 000 [02] – 69 000 [02])

**(20 புள்ளிகள்)**

**வினா இல. 6**

| பகுதி | 1 | 2 | 3 | 4 | 5 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | --- | --- | --- | --- | --- | 20 |
| (ஆ) | 03 | 06 | 03 | 03 | 05 | 20 |
| | | | | | | 40 |

PAST PAPERS WIKI

(45) WWW.PastPapers.WiKi (45)




2024 A/L Tamil Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Political Science Past Paper Book (Tamil Medium)
රු 1,200.00
or 3 X රු 400.00 with KOKO




2024 A/L Islamic Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Islamic Civilization Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Geography Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Art Past Paper Book (Tamil Medium)
රු 500.00
or 3 X රු 166.67 with KOKO




2024 A/L SFT Past Paper Book (Tamil Medium)
රු 800.00
or 3 X රු 266.67 with KOKO




2024 A/L ICT Past Paper Book (Tamil Medium)
රු 900.00
or 3 X රු 300.00 with KOKO




2024 A/L ET Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L BST Past Paper Book (Tamil Medium)
රු 800.00
or 3 X රු 266.67 with KOKO




2024 A/L Agricultural Science Past Paper Book (Tamil Medium)
රු 1,100.00
or 3 X රු 366.67 with KOKO




2024 A/L Common General Test Past Paper Book (Tamil Medium)
රු 600.00
or 3 X රු 200.00 with KOKO




2024 A/L Business Studies Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Accounting Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Economics Past Paper Book (Tamil Medium)
රු 900.00
or 3 X රු 300.00 with KOKO




2024 A/L Chemistry Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Biology Past Paper Book (Tamil Medium)
රු 750.00
or 3 X රු 250.00 with KOKO




2024 A/L Physics Past Paper Book(Tamil Medium)
රු 1,050.00
or 3 X රු 350.00 with KOKO


**LOL STORE PVT LTD** Copyright ©2023

We Using Safe Payment For
Easy Monthly Installments
KOKO
CASH ON DELIVERY
VISA